838

838

தொகுதி 12.] 1933௵ ஜூன்௴ [பகுதி 5.

மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
கா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

F THE REGIS
8 AUG 19
ADRA

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு,

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 7-பாகம் விலை ரூபா 13-14-0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

இரத்தினபுரி இரகசியம்

(8–ம் பாகம்)

ஓர் இனிய தமிழ் நாவல்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 AUG 1933
MADRAS

ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள்
எழுதியது.

18658l.

"ஆனந்த போதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியார் அவர்களால்
வெளியிடப்பெற்றது.

1933

காபிரைட் ரிஜிஸ்தர்] [விலை ரூபா **2-4-0**.

PRINTED AT THE
"ANANDA BODHINI" PRESS,
NO. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET,
SOWCARPET, MADRAS.

8 AUG 1933

அதற்கேற்ற பதிலை அறிவிக்க ஒருவாரம் வாயிதா கொடுப்பதாகவும் கூறினார். இதற்குள் நாங்கள் ஹேமவதி சீமாட்டிக்கே எழுதிக் கேட்டதில் முதலில் எப்படி எழுதியிருந்த போதிலும் கடைசியாக நேற்று கிடைத்த கடிதத்தில் நாங்கள் அவ்வம்மையாரின் கட்சியை எடுத்துப் பேச வேண்டுமென்றும், மோகனதாஸ் செய்த தவறு உண்மையானதே என்றும் எழுதியிருக்கிறார். செல்வநாதர் கொடுத்த கால வரைபறை இன்றோடு முடிந்து விடுகிறது. நாளையதினம் அவர் எங்களிடம் வருவாராதலால் இதற்குள் இது சம்பந்தமாய் உங்களையும் கலந்து ஆலோசித்து விடலாம் என்று நினைத்து இங்கே வந்தேன்' என்று விவரமாகக் கூறினார். அதற்குப் பஞ்சநதம் பிரபு, 'சீமாட்டி அறிவித்தபடியே அவளது கட்சியை எடுத்து வாதிப்பது தானே சரியான வேலையாகும். அதைப்பற்றி என்னைக் கேட்பானேன்' என்று கூறவும், வக்கீல், 'பிரபுவே, அவசரப்படவேண்டாம். எதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சீமாட்டியை அனியாயமாகக் கோர்ட்டுக்கு இழுக்க வேண்டுமே என்று பார்க்கிறேன். கோர்ட்டுக்குப் போய்விட்டால் வழக்கு எப்படி முடியும் என்பதை யாரால் முன்னதாக யூகித்துச் சொல்ல முடியும்? மோகனதாஸின் கட்சியில் பலர் சேர்ந்து கொள்ளலாமல்லவா?' என்று கூறினார். அப்போது பிரபு, 'அப்படியானால் உமது அபிப்பிராயமென்ன? மோகனதாஸ் சீமாட்டியின்மீது என்ன குற்றம் சாட்டுகிறான்,' என்று கேட்டார். அப்போது தேவிதாஸ், செல்வநாதருக்கும் தங்களுக்குமிடையில் நடைபெற்ற சம்பாஷணையை விவரமாகக் கூறி மேலும் பேசுகையில், 'ஹேமவதி சீமாட்டியின் பெயர் கெட்டுப்போகும் முறையில் விவகாரத்தை ருஜுப்படுத்துவதற்கான ஆதாரங்கள் அவரிடம் இருக்கிறதாம். ஆகவே, அவளது மானத்தைக்

காப்பாற்ற வேண்டுமாயின் கோர்ட்டுக்குப் போகாமல் வெளியிலேயே சமாதானம் செய்து கொள்வது நல்லதாம் சீமாட்டியைக்கெடுக்கவேண்டுமென்பது அவர்களுடைய அபிப்பிராயம் மல்லவாம். மோகனதாஸ்மீது சுமத்தியுள்ள வீண்பழியை நிவர்த்தித்து அவன் குற்றமற்றவனெனக் கூறிவிட்டால் போதுமாம். ஆகவே எனக்கும் மனமோகனருக்கும் இந்த விவகாரத்தில் ஆழ்ந்த சந்தேகங்களும், சிந்தனைகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆதலால் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்' என்று கூறினர்.

அதைக் கேட்ட பஞ்சநதம் பிரபு, 'தேவிதாஸரே, அப்படியானல் மோகனதாஸ் கூறும் கதை உண்மையாக இருக்கலாமென்றும், சீமாட்டி சொல்வது வீண்பழி யென்றும் நீங்கள் நினைப்பதாக நான் கருதலாமா? அவசரப்பட்டு எத்தகைய முடிவுக்கும் வந்துவிடாமல் நிதானமாக சமய சந்தர்ப்பங்களை யெல்லாம் ஆலோசித்துப் பதில் கூறுங்கள்' என்ருர். அப்போது தேவிதாசர் கூறியதாவது; 'பிரபுவே, நானும் மனமோகனரும் நன்ருக ஆலோசித்துப் பார்த்தோம். முதலில் சீமாட்டியின்மீது அவன் குற்றம் சுமத்தியிருப்பதைக் கண்டு ஆத்திரமடைந்தோம்; சீமாட்டி கற்பிற் சிறந்தவளே என்றும், ஒழுக்கத்தில் சிறந்த வாழ்க்கையை யுடையவளே என்றும், உயரிய குணநிசயங்களை யுடையவளே என்றும் நினைத்தோம். ஆனல் செல்வநாதர், அவள் மோகனதாஸினிடம் தவருக நடந்து கொண்டதை ருஜுப்படுத்தக் கூடிய ஆதாரங்கள் இருப்பதுடன் அவருடைய பெயரையே கெடுத்துவிடக் கூடிய ஆதாரங்களை யெல்லாம் கொண்டுவந்து அவளைப் பாழ்படுத்தி விடுவதாகக் கூறுகிருர். ஆகவே நாங்கள் இன்னது செய்வதென்று தோன்ருமல் இப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமையில் உங்களைக் கலந்து

ஆலோசிப்பதே நலமெனக் கருதி நான் இங்கு வந்தேன். மாதர்கள் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு மாதிரி நடந்து கொள்ளலா மல்லவா? அம்முறையில் சீமாட்டியும் ஏதே னும் தவறுசெய்து விட்டிருக்கலாம். அதிலும் மோகனதாஸ் மிக்க அழகுள்ள வாலிபனுக இருப்பதால் அவள் தன் மட மை காரணமாகத் தவறு செய்திருக்கலாம்' என்றார்.

தேவிதாசர் இவ்வாறு கூறுவதைக் கேட்ட பஞ்சநதம் பிரபு நன்ருக யோசித்துப் பார்த்ததில் அவர் கூறியது உண் மையாகவும் இருக்கலாமோ என்று எண்ணினர். தான் எவ் வளவோ யோக்கியமானவர் என்றும் நல்லவர் என்றும் பலர் பலவாறு புகழ்ந்திருந்தும் தனது வாழ்க்கை எவ்வளவு குற் றம் நிரம்பியதென்பது தனக்குத் தெரியுமல்லவா? அதே நிலைமையைக் கொண்டு ஹேமவதி சீமாட்டியின் யோக்கி யதையை அளந்து பார்த்தபோது அவருக்குச் சந்தேகம் ஏற்பட்டதில் ஆச்சரிய மொன்று மில்லை. இப்போதும் நமது இடையே எவ்வளவோ பேர் பசுத்தோல் போர்த்த புலிகளைப் போல் ஆஷாடபூதி வேஷத்துடன் வாழ்க்கையை நடத்து வோர் எவ்வளவுபேர் மலிந்து கிடக்கின்றனர். பிறமக்களால் கண்ணியமானவர் என்றும். யோக்கியப் பொறுப்பு வாய்ந்த வர் என்றும் பிரமாதமாகப் புகழும்படி வாழ்க்கையை மேற் போக்காக நடத்துவோர் அந்தரங்கத்தில் இழைக்கும் கொடு மைகள் பல பல. ஆஹா! அவற்றை நினைக்கும்போதும் பயங் காமாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்களெல்லாம் மனச் சாட்சியை ஆராய்ந்துகொண்டால்தான் தங்கள் குற்றம் தங் களுக்குத் தெரியும். இதற்காகத்தான் பெரியோர்களெல்லாம் மனச் சாட்சியின்படி நடக்கவேண்டுமென்று சொல்வார்கள். ஆகவே பஞ்சநதம் பிரபுவும் ஹேமவதி சீமாட்டி மிக்க யோக்

கியமானவள்போல் நடந்து கொண்டதெல்லாம் வெளி நடிப்பாக இருக்கலாமென்று சந்தேகிக்க ஆரம்பித்தார்.

இப்படியெல்லாம் பல நிமிஷங்கள் பலவாறாகச் சிந்தித்த பின்னர் அவர், 'சரிதான், ஐயா நீங்கள் சொல்வதெல்லாம் சிந்திக்கக் கூடிய விஷயம்தான். ஆயினும் இதில் தலையிட்டுக் காரியம் செய்வது மிகக் கஷ்டமான வேலையல்லவா? சீமாட்டிக்கு அவமானம் வந்துவிடக்கூடிய ஆபத்தில் அவள் சிக்கிக் கொள்ளாதபடி அவளைத்' தடுக்க வேண்டியது நம்முடைய கடமையாகவே இருக்கிறது. அவளுடைய விரோதிகள் அவளுக்கு விரோதமாக எத்தகைய திடமான ஆதாரங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அவளறியாமல் இருக்கலாம். நீர் சொல்லியபடி நாமே ஜெயிப்போமென்று நினைத்து ஆரம்பிக்கும் வழக்குகளிலெல்லாம் நமக்குத் தெரியாமல் எதிரிகள் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கும் சாட்சியங்களால் தோல்வியடைய நேரிடுகிறதென்பதும் வாஸ்தவமே,' என்று கூறினார். அதற்கு தேவிதாசர், 'ஆம், அப்படித்தான் தோல்வி ஏற்பட்டு அவமானமடைந்த பின்னர் தாங்கள் கோர்ட் விவகாரத்தில் இறங்கியதற்காக வருத்தப்படுகின்றனர். ஆகலால் நீங்கள் இப்போதே இவைகளையெல்லாம் விவரித்து ஹேமவதி சீமாட்டிக்கு எந்த வழி நல்லது என்பதுபற்றி வற்புறுத்தி எழுதினால், அல்லது தாங்களே நேரில் போய் எல்லாவற்றையும் விவரித்துக்கூறினால், உங்கள் பேச்சு வன்மையால் அவளை வழிக்குக் கொண்டுவந்து இந்த விவகாரத்தைச் சமாதானப் படுத்தும்படி எங்களுக்கு ஒரு கடிதம் எழுத ஏற்பாடு செய்யுங்கள் என்றார். அதற்கு அப்பிரபு, 'நான் இதற்கு முடிவான பதில் சொல்ல முடியாது. இதைப்பற்றி நிதானமாக யோசித்துப் பார்க்க வேண்டும். நான் அவசரப்பட்டு எந்தக் காரியத்தையும் ஏற்றுக்கொண்டு விடமாட்டேன்,' என்றார்.

அப்போது தேவிதாசர், 'இந்த விஷயம் மிகவும் அவசரமானதாயிற்றே. இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்குள் இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வராவிட்டால் செல்வநாதரின் வக்கீல் வழக்கைத் தொடர்ந்துவிடுவார் என்பது மட்டும் நிச்சயம்,' என்று கூறியதும் அப் பிரபு, 'ஐயா, அப்படியானால் நான் இன்று முழுதும் அதைப்பற்றிச் சிந்திக்கிறேன். நாளையதினம் நான் கிருஷ்ணகிரிக்குப் புறப்படுவதாயின் அதை உங்களுக்குத் தெரிவித்து விடுகிறேன். போகாமற்போயின் அதையும் அறிவிக்கிறேன்,' என்றார். அவர்க ளிருவரும் அவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது ஒரு சேவகன் அவ்வறையில் நுழைந்து சீலிடப்பட்ட ஒரு பையை பிரபுவினிடம் கொண்டுவந்து கொடுத்தான். அச்சேவகன் வெளியேசென்ற பின்னர் அந்தப் பிரபு அப்பையின் சீலை அவிழ்க்குமுன் அறையின் நான்கு பக்கங்களிலும் சுற்றிப் பார்த்தார். தேவிதாசர் தவிர வேறு யாரேனும் இருக்கிறார்களோ என்பதையும் கவனித்தார். தேவிதாசரும் அமைதியாக இராமல் அந்தப்பையில் என்ன இருக்கிறதென்று தெரிந்துகொள்ள அதிக ஆவலுடையவராக இருக்கிறாரோ என்று அவரது முகத்திலிருந்தும் தெரிந்துகொள்வதற்காக அவரது முகத்தை உற்று நோக்கினார். தேவிதாசரும் பஞ்சநதம் பிரபுவின் மனதில் என்ன ஊசலாடிக்கொண்டிருக்கிறதென்பதை நன்கு அறிந்துகொண்டார். ஆகவே அவர் சிரித்துக்கொண்டே அவ்விடத்தைவிட்டுப் புறப்பட அனுமதி கேட்டார். ஆயினும் பிரபு, அந்தப் பார்சலை அவிழ்த்து பார்க்கும்வரை வக்கீல் அங்கேயே இருக்கவேண்டுமென விரும்பினார். ஆகவே அவரும் தங்கி இருந்தார். பிரபுவும் அந்தப் பையைப் பார்த்து அதிலுள்ள கடிதங்களையெல்லாம் படித்துப் பார்த்துவிட்டு மறுபடியும் அப்படியே வைத்து மடித்து ஒரு கயிற்றால் கட்டிவைத்தார். பிறகு வக்கீலைப் பார்த்து, 'ஐயா, இதற்காகத்தான் உம்மை

இருக்கச் சொன்னேன். ராணியாரின் மந்திரிகள் எனது ஆற்றலையும் அறிவையும் மதித்து என்னை அன்னியநாட்டுக்கு ஒரு வேலையாகப் போகும்படி கட்டளை இட்டிருக்கிறார்கள். ஆதலால் நான் கிருஷ்ணகிரிக்குப் போகமுடியாது. இப்போது நீங்கள் சொன்ன விஷயங்களையெல்லாம் விவரித்துச் சீமாட்டிக்கு நீண்டதொரு கடிதம் எழுதிவிடுகிறேன்' என்றார்.

அச்சமயத்தில் மறுபடியும் அவ்வறையின் கதவு திறக்கப்பட்டு சேவகன் உள்ளே வந்து பிரபுவைப் பார்த்துப்பேச தினகரம்பிரபு வந்திருப்பதாக அறிவித்தான். பிரபுவும் அவனை அனுப்பும்படி சொன்னார். தினகரன் அறையில் நுழைந்ததும் அங்கு இன்னும் யார் இருக்கிறார்கள் என்பதையும், அப்படிப்பட்ட பிரபுக்களோடும் அறிஞர்களோடும், வயதானவர்களோடும் பேசும்போது உபயோகிக்க வேண்டிய மரியாதைச் சொற்களையும் கவனியாமல் ஒரே பிடியாக, 'ஐயா, இப்படியெல்லாம் நான் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்க முடியாது. நான் வெளிதேசங்களுக்குச் செல்வதென முடிவு செய்து விட்டேன்' என்று கூறினான். அவன் நடந்துகொண்டமாதிரி பஞ்சநதம் பிரபுவுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. வெறுப்படைந்தாரென்றாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் ஒரு நாற்காலியைக் காண்பித்து, 'தினகரா, நீ அந்த ஆசனத்தில் உட்காரு. ஆத்திரப்படாமல் நிதானமாக யோசனை செய்து நீ எந்த விஷயமாக அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறாய் 'என்பதைச் சிறிது சொல் பார்க்கலாம்' என்று கேட்டார். அவன் அலட்சியமாக நாற்காலியில் உட்கார்ந்து ஒரு காலின்மீது மற்றொரு காலைப் போட்டுக்கொண்டு, 'ஏன், இந்த இரத்தினபுரி வாழ்க்கையே எனக்குப் பிடிக்கவில்லை. சில தினங்களுக்கு முன் நீங்கள் தெரிவித்த வேலையை ஒப்புக்கொண்டு வெளிநாட்டுக்குப் போய்விடாமல்

போனேனே என்று இப்போது வருத்தப்படுகிறேன். என் கடன் லிஸ்ட் உங்களுக்கு அனுப்பியதை நீங்கள் பார்த்ததி லிருந்து எனக்கும் நாடகக்கணிகை கமலகுமாரிக்கும் அதிக கட்பு உண்டு என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். அவள் இப்போது சமீபத்தில் விசித்திரமான மாணத்தை யடைந் தாள் என்பதையும் நீங்கள் பத்திரிகையில் படித்திருக்க லாமே' என்றான்.

அதற்குப் பஞ்சநதம் பிரபு, 'ஆம்; அதை நான் அறி வேன். அவள் கொல்லப்படும்போது கிருஷ்ணகிரியிலுள்ள சுந்தாவிலாச மாளிகைக்குச் சென்றுகொண் டிருந்ததாகத் தெரிகிறது. ஒருகால் நீ அங்கு இருக்கிறாயோ என்னும் சந் தேகத்துடன் போயிருக்கலாம். அல்லது உன் தாயாரைச் சந்தித்து ஏதேனும் விவகாரம் பேசப் போயிருக்கலாம்' என்று சொல்லி முடிப்பதற்குள் தினகரன் குறுக்கிட்டு, அவள் எதற் காகச் சென்றாள் என்பதைச் சொல்ல என்னாலேயே முடிய வில்லை. ஆயினும் அதையெல்லாம் பற்றி இப்போது பேசிக் கொண்டிருக்கத் தயாராக இல்லை. எனக்கு என்னுடைய வாசஸ்தலம் வெறுப்பைத் தருகிறது. எங்கேயாவது கிளம்பி விட வேண்டுமென்று தோன்றுகிறது' என்றான். அதற்கு அப்பிரபு, 'அப்படியானால் நீ கிருஷ்ணகிரிக்குப் போய் உன் குடும்பத்தாருடன் இருக்கக்கூடாதா? இப்போது மதனவல் லிச் சீமாட்டியும் ஷண்பகமும்கூட அங்கேயே இருப்பதாகக் கேள்விப்பட்டேனே' என்று கேட்க அவன், 'இல்லை. மதன வல்லிச் சீமாட்டியும் ஷண்பகமும் நேற்று இவ்விடம் வந்து விட்டார்கள். என்னுடைய சேவகன் தற்செயலாக அவர்கள் வந்ததை நேற்று பார்த்தானாம்' என்றான்.

அதற்குப் பஞ்சநதம் பிரபு, 'அவ்வாறாயின் உனக்கு

மனைவியாகவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் அம்மாளைப் போய் நீ பார்த்து க்ஷேமசமாசாரம் விசாரிக்க வில்லையோ?' என்று கேட்க அவன், 'இல்லை. நான் இன்னும் போகவில்லை. இப்போதுதான் போகப்போகிறேன். நான் கமலகுமாரியுடன்சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்ததை ஷண்பகம் அறிந்துகொண்டுவிட்டிருப்பாளே என்று அஞ்சுகிறேன்; அப்படி இருந்தால் அவர்கள் பரிகாசம் செய்வார்களல்லவா? ஆதலால் சிலமாதங்கள் வரையேனும் வெளிதேசம் போய் வரலாமென்று இருக்கிறேன். நீங்கள் முன்பு சொன்ன அந்த வேலையை ஒப்புக்கொள்கிறேன், என்று தெரிவிக்கவே இப்போது உங்களிடம் வந்தேன்' என்றான். அதற்கு அப்பிரபு, 'அந்த வேலை இப்போது காலி இல்லை. வேண்டுமாயின் நான் ராணியாரின் வேலையாக வெளிநாட்டுக்குப் போகப்போகிறேன். நீயும் என்னுடன் வரலாம்' என்றார். அதற்கு அவன் அவருடன் உடனேயும் புறப்படத் தயாராக இருப்பவன் போல், 'நீங்கள் எப்போது புறப்படுகிறீர்கள்?' என்று மிக்க ஆவலுடன் கேட்டான். அவர், 'நான் இன்னும் மூன்று தினங்களுக்குள் புறப்படுகிறேன். நீ என்னுடன் வருவதாக இருந்தால் நாளையதினமே ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட வேண்டும்' என்றார். அதற்கு அவன், 'அப்படி யொன்றுமில்லை. இனிமேல் நான் யோசிக்கப் போவதில்லை. இப்போதே முடிவு செய்துவிட்டேன்' என்றான். பஞ்சநதம் பிரபுவும் அவனது கையைப் பிடித்துக்கொண்டு ஏதோ சிறிது உபதேசம் செய்யப் பார்த்தார். ஆனால் அவன் அதையெல்லாம் கேட்கப் போகிறானா? ஆகவே அவன் அதற்காகக் காத்திராமல் பிரபுவினுடையதும், தேவிதாசருடையதும் அனுமதி பெற்றுக்கொண்டு தினகரன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான்.

இந்த தினகரனைப் போலத்தான் பல வாலிபர்களும் கெட்டுப் போகிறார்கள். கையில் பணம் இருக்கும் போது பெரியோர்கள் புத்திசொல்லி ஏதேனும் நல்ல தொழிலை ஏற்றுக்கொள்ளச் சொன்னால் அந்தப் புத்திமதியைச் சிறிதும் பொருட்படுத்தாமல் கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று தான்தோன்றித் தம்பிரான்களாய்த் திரிந்து துஷ்டர்களின் சகவாசத்தாலும், ஒழுக்கங்கெட்ட தன்மையாலும், வேசையர் மோகத்தாலும் சகலவிதமான துன்மார்க்கங்களிலும் இறங்கி ஒரு ஆட்டம் ஆடிவிட்டுக் கையிலுள்ள பணமெல்லாம் கரைந்த பின்னர், அல்லது தாங்கள் நடத்திய வாழ்க்கையில் பலவித ஏமாற்றங்களையும், கஷ்ட நஷ்டங்களையும் அனுபவித்து அதன் பயனாக ஒருவித பாடத்தைக் கற்ற பின்னர், புத்தி சுவாதீனத்துக்கு வந்து தாங்கள் முன்பு பெரியோர்கள் சொன்ன சொல்லைக் கேட்கவில்லையே என்பதற்காக வருந்தி மீண்டும் அந்தத் தொழில் கிடைக்குமோ என்று ஏங்கிப் பெரியோர்களிடம் செல்கின்றனர். ஆனால் அந்த வேலை இவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்குமா? ஆகையால் வாலிபர்கள் ஆரம்பத்திலேயே நிதானபுத்தியுடன் தங்களிடம் அபிமானமும் நல்லெண்ணமும் கொண்ட பெரியோர்களின் யோசனையைக் கேட்டு நல்லபடியாக வாழ்க்கையை நடத்தினால் இன்பமான வாழ்க்கையை அனுபவிக்கலாம்.

—:(o):—

76-வது அத்தியாயம்

வெறுக்கப்பட்ட காதலன்

பஞ்சநதம் பிரபுவையும் பச்சையப்பரையும் சந்தித்து விட்டு மிக்க ஆத்திரத்துடன் வெளியேறிச் சென்ற செல்வநாதரைப்பற்றி இப்போது கவனிப்போம். அங்கிருந்து புறப்பட்ட செல்வநாதர் தன் வண்டியில் ஏறிக்கொண்டு அதை மதனவல்லிச் சீமாட்டியின் மாளிகைக்குச் செலுத்தும்படி கட்டளையிட்டார். வண்டி அம்மாளிகையை நோக்கி ஓடும்போது அவரது மனதில் பலவித சிந்தனைகள் உதித்தன. உடனே இந்திராபாயின் வீட்டுக்கே சென்று அவள் கொள்ளைத்தொழில் மேற்கொண்டிருப்பதைப்பற்றி விசாரிக்கலாமா என்று தோன்றியது. அப்படியே செய்யவும் ஆவல் கொண்டார். எனினும் தன்னுடைய ஆத்திரமெல்லாம் அடங்கிய பிறகு மன அமைதி ஏற்பட்ட பின்னரே இந்திராபாயுடன் பேசுவது நலமென்று தோன்றியதால் மதனவல்லிச் சீமாட்டியின் மாளிகைக்கே சென்றார். அங்கே அவர் மிக மரியாதையுடனேயே வரவேற்கப்பட்டார். மதனவல்லிச் சீமாட்டியும் செல்வநாதரும் நீண்டநேரம்வரை ஒரு அறையில் உட்கார்ந்து பல விஷயங்களைப்பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனல் அச்சம்பாஷணையில் ஷண்பகவல்லி கலந்து கொள்ளவில்லை. எனவே அவர்களிருவரும் பேசி முடிந்தபின்னர் ஷண்பகம் இருந்த அறைக்குச் சென்றார்கள். அவர்களைக் கண்டதும் ஷண்பகவல்லி தனது ஆசனத்தினின்றும் எழுந்து நின்று செல்வநாதருக்கு அவர் தனது காதல

னுடைய மதிப்பு வாய்ந்த நண்பன் என்பதற்காக அதிக மரியாதை செய்தாள். அவரும் அவளிடம் அவளுடைய பெற்ரோர்கள் அன்பு காட்டுவதுபோல் பட்சமாகப் பேசினர்.

அவர் ஷண்பகவல்லியை ஒரு சோபாவில் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, 'எனதன்புள்ள ஷண்பகமே! நானும் உனதுசிற்றன்னையும் இதுவரை என்ன பேசிக்கொண்டிருந்தோம் என்பதையறிய நீ மிக ஆவலுடன் இருப்பாய் என்று நம்புகிறேன். விசேஷமொன்றுமில்லை. ஒரு குறிப்பிட்ட இளைஞன்மீது ஏற்பட்ட பழி பொய்யானதென்றும் அவன் உண்மையில் உயரிய குணநிசயங்களை யுடையவனென்றும் விளக்கினேன். அவ்விஷயத்தில் உன் சிற்றன்னைக்கும் திருப்தி ஏற்பட்டுவிட்டது' என்ருர். அதற்கு அவள் 'ஐயா, அந்தக் குறிப்பிட்டவருடைய பழியைப் பரிகரித்ததற்காக நான் தங்களுக்கு அதிக நன்றி செலுத்துகிறேன்' என்றதும் அப்பெரியார், 'அவனை நீ அதிக அன்புடன் நேசிக்கிருய் அல்லவா? உன் சிற்றன்னையின் முகத்தைப் பீதியுடன் பார்க்க வேண்டாம். அவனை நீ நேசிப்பதை இதுவரை மறைத்து வைத்திருந்ததற்காக அவள் உன் மீது கோபித்துக்கொள்ள மாட்டாள். இப்போ தவளுக்கு எல்லா விபரமும் நன்ருகத் தெரியும்,' என்று சொல்லி முடித்ததும் மதனவல்லிச் சீமாட்டியும், 'ஆம், ஷண்பகவல்லி, செல்வநாதர் எல்லா விவரங்களையும் என்னிடம் கூறினர். இனி நான் உன்னைத் திட்டமாட்டேன். நானும் இரண்டொரு வாரங்களாகவே உன்னைத் தினகரம் பிரபுவுக்குக் கொடுத்து விவாகம் செய்தால் உன்வாழ்க்கை இன்பமானதாக இருக்குமா என்று யோசித்துத்தான் வருகிறேன். இப்போது அவனுக்கு உன்னைக் கொடுப்பதில்லை யென்றும் நாம் தீர்மானித்திருக்கிற விவாக ஒப்பந்தத்தை ரத்து செய்து விடுவதென்றும் தீர்மா

னித்து விட்டேன்,' என்றார். அதைக் கேட்டதும் அழகிற் சிறந்த கன்னிகையாகிய ஷண்பகவல்லி தன் ஆசனத்தினின்றும் துள்ளி எழுந்து சென்று தன் சிற்றன்னையை இறுகத் தழுவிக் கொண்டு, 'சிற்றன்னையே! இப்போது நீ இவ்வாறு கூறியதால் நான் எவ்வளவு சந்தோஷப்படுகிறேன் என்பதை நீ அறியமாட்டாய். உன்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்னும் எண்ணத்துடன்தான் என் மனம் விரும்பிய காதலனைப் பற்றியும் நான் சிந்தியாமல் மௌனமாக இருந்து விட்டேன்,' என்றாள்.

அப்போது மதனவல்லிச் சீமாட்டி, 'என் கட்டளை என்பதுபற்றி இனி ஒன்றும் பேச வேண்டாம். இயற்கையாக ஏற்படும் அன்பைத் தடுப்பதால் என்ன தீமைகள் விளையுமென்பதை நமது செல்வநாதர் இதுவரை எனக்கு நன்றாக விளக்கிக் கூறினார். மேலும் ஹேமவதி சீமாட்டியையே இனி நான் மதிக்கமாட்டேன். அவளைப்பற்றி மிக்க வருந்தத்தக்க சமாசாரங்களெல்லாம் எனக்குத் தெரிய வந்திருக்கின்றன. அவைகளெல்லாம் உனக்கு முன்னரே மோகனதாஸின் மூலமாகத் தெரியுமல்லவா,' என்று கூறியதும் செல்வநாதர், 'அம்மா, ஷண்பகம், மோகனதாஸ் இவ்விடம் வந்து உன்னுடன் பேச மதனவல்லிச் சீமாட்டி அனுமதி கொடுத்திருக்கிறாள்,' என்றார். அதைச் செவியுற்றதும் ஷண்பகவல்லி அளவு கடந்த ஆனந்தத்தை யடைந்தாள். அவளது கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் பெருகலாயிற்று. இதற்கு முன் தான் அடைந்த துக்கத்தை யெல்லாம் மறந்து விட்டாள். செல்வநாதரின் அருகில் போய் நின்று அவரது கையைப் பிடித்து அன்புடன் அழுத்தி அதற்கு முத்தமிட்டாள். ஆனால் சில நிமிஷங்களுக்குப் பின்னர் அவள் மீண்டும் துக்கத்துடன், 'ஆனால் என் சகோதரனுடைய கதி என்ன?' என்று கேட்

டாள். அப்போது செல்வநாதர், 'சந்திரசேகரனு? இப்போது உன் சகோதரன் எங்கே இருக்கிருன்' ஓஹோ ஞாபகத்துக்கு வருகிறது. அவன் குதிரைமீதிருந்து விழுந்து அந்தக் காயத்தால் ஹேமவதிசீமாட்டியின் மாளிகையிலேயே கிருஷ்ணகிரியில் இருப்பதாக மதனவல்லிச் சீமாட்டி இப்போதுதான் சொன்னுள். ஷண்பகம்! உன் சகோதரனுடைய நடத்தை அவன் விஷயத்தில் சிரத்தை கொண்டவர்களுக்கு அதிருப்தியை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆனல் தற்சமயம் அவனை அவனிஷ்டப்படியே செல்லும்படி விட்டுவிட வேண்டியதுதான்' என்ருர்.

அதற்கு அப்பெண்மணி, 'ஐயோ, அப்படியா சொல்லிவிட்டீர்கள். இதனல் அவனுக்கு அதிக கஷ்டங்கள் சம்பவித்துவிடுமே. அந்தப்பாழும் ஹேமவதி அவனை அழித்துவிடுவாள். எனக்கு மிக்க பயமாக இருக்கிறது' என்றதும் அப்பெரியார், 'அப்படியொன்றும் பயப்படவேண்டிய அவசியமில்லை. எனக்குத் தெரிந்தவரையில் உன் சகோதரன் ஒரு பிடிவாதக்காரன். அவன் ஒருவழி போனல் மற்றெவரும் அவனை வேறு வழியில் எளிதில் திருப்பிவிட முடியாது. அவன் எங்கும் காணமற் போய்விடமாட்டான். தற்சமயம் அவனுடைய விஷயத்தில் நாம் தலையிடுவதில் பிரயோசனமேயில்லை' என்ருர். அவர்கள் அவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது ஒரு சேவகன் அவ்வறைக்கு வந்து தினகரம் பிரபு வந்திருப்பதாகத் தெரிவித்தான். உடனே பெரியார் என்ன யோசனை கூறப்போகிருர் என்பதை அறியும் ஆவலுடையவர்கள்போல் மதனவல்லியும் ஷண்பகமும் அவரது முகத்தை உற்று நோக்கினர். அவரும், 'அவன் இப்போது இங்கு வந்தது மிக நல்லதுதான். அவனுடன் எதையும் பகிரங்கமாகப் பேசிவிடவேண்டியதுதான். மதனவல்லி நீ அவனுடன் முடி

வாகப் பேசிவிடு. அவன் ஏதேனும் போக்கிரித்தனம் செய்தால் நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொன்னார். அவர் அவ்வாறு கூறும்போது சேவகன் அந்த தினகரனை உள்ளே அனுப்புவதற்காக வெளியே போயிருந்தான். ஆகவே அவர் பேசி முடிப்பதற்கு முன்னர் தினகரனும் அவ்வறையில் நுழைந்தான். அவன், தான் நாடகக்கணிகை கமலகுமாரியுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தது அங்கு எல்லாருக்கும் தெரிந்துபோயிருக்குமென்று நினைத்து அவர்களை எதிர்த்துப் பேசி வாயாடித்தனம் செய்வது என்னும் முடிவுடனேயே வந்தபடியால் ஒரு சோம்பேறியைப் போல் வந்து சேர்ந்தான்.

அவன், அங்கு செல்வநாதர் இருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டான். கமலகுமாரி கிருஷ்ணகிரிக் கருகில் கொல்லப்பட்டபோது செல்வநாதரும் அங்கேயே இருந்தார் என்பதை அவன் அறிவானதலால் செல்வநாதர் அங்கு வந்து தன்னைப் பற்றியே ஏதோ குற்றம் கூறி ஷண்பகவல்லியைத் தனக்குக் கொடுக்கக் கூடாதென்று யோசனை கூறியிருப்பார் என்று அவன் யூகித்ததனலேயே அவ்வாறு திடுக்கிட்டான். ஆனல் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் சமாளித்துக்கொண்டு, 'ஓ, செல்வநாதரே! நீர் இங்கு இருக்கிறீரா?' என்று விசாரித்தான். அதற்கு அவர், 'ஆம்; நான் இங்கு இருப்பது உனக்குத் தெரிவதில்லையா? தினகரம்பிரபு முன்பு உங்கள் வீட்டில் என்னைச் சந்தித்தபோது உதைப்பதாகச் சொன்னயே அப்படியெல்லாம் இப்போதுபேச உனக்குத் தைரியமில்லை என்று நினைக்கிறேன்,' என்ருர். அவன் ஒருவாறு குழப்பமடைந்தவனுய், 'பெரியாரே! இப்போது அந்தப் பழைய சங்கதிகளையெல்லாம் ஏன் கிளப்ப வேண்டும்,' என்று கூறிக்கொண்டே ஷண்பகவல்லியின் அருகில்

சென்று அவளது கையைப் பிடித்துக்கொண்டு, 'ஷண்பகம்! நீ கிருஷ்ணகிரியிலிருந்து வந்து விட்டாயோ?' என்று கேட்டான். அவள் தன் கையை விலக்கிக்கொண்டு ஒரு பதிலும் கூறுமல் நின்ருள். ஆகவே அவன் மதனவல்லிச் சீமாட்டியைப் பார்த்து, 'ஏது' என்ன சங்கதி சௌக்கியம்தானே? எல்லாரும் ஏதோ ஒருவிதமாக இருப்பதாகத் தெரிகிறதே' என்று வினவினன். அதற்குச் சீமாட்டி, 'பிரபுவே! அந்த நாற்காலியில் உட்காரு. உன்னுடன் சாவகாசமாகப் பேச வேண்டி யிருக்கிறது. அப்போதுதான் உனக்குத் திருப்தியான சமாதானம் கூற என்னல் முடியும்,' என்றதும் தினகரனும் ஒரு ஆசனத்தில் அமர்ந்தான்.

அப்போது மதனவல்லிச் சீமாட்டி மேலும் பேச ஆரம்பித்து, 'பிரபுவே, பத்திரிகைகளில் சமீபத்தில் வெளியான செய்தியிலிருந்து கிருஷ்ணகிரிக் கருகில் சுட்டுக் கொல்லப்பட்ட ஒருமாது உன்னுடைய ஆதரவில் சிலகாலம் இருந்ததாகப் புகார் வெளியாகிறதே,' என்று கேட்டதும் அவன் ஆக்திரத்துடன், 'அப்படித்தான் இருந்தால் என்ன? நான் இன்னும் ஷண்பகத்தைக் கலியாணம் செய்து கொண்டு விடவில்லையே. எனது கலியாணம் முடிந்ததும் நான் அந்த சம்பந்தத்தை விட்டு விட்டிருப்பேன். எல்லா இளைஞர்களுமே இவ்வாறு செய்வது சகஜம்தானே. நான் மாத்திரம் அதில் விலக்குவிதி உள்ளவனே?' என்ருன். அப்போது செல்வநாதர் அவனை உற்று நோக்கி, 'அப்பா, உன்னுடைய சமாதானத்தையோ அல்லது விவாதத்தையோ கேட்க அந்த அம்மாள் விரும்பவில்லை. உன்னிடம் சொல்வப்போகும் ஒரு சமாசாரத்துக்கு முன்னுடியாக இதைத் தெரிவிக்க வேண்டியிருப்பதால் அவ்வாறு கூறினுள்,' என்ருர். உடனே தினகரன் அதிக ஆத்திரத்துடன், 'ஓ, என்ன முடிவு ஏற்படப் போகிற

தென்பதை நான் அறிந்து கொண்டு விட்டேன். ஆனால் அவ் வளவு சுலபத்தில் என்னை ஏமாற்றிவிட முடியாது. செல்வ நாதரே! நீர் அநாவசியமாக இந்த விஷயத்தில் ஏன் தலையிடு கிறீர். இதெல்லாம் உம்முடைய விஷமம்தான் என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது. நீர் என்னைப்பற்றிப் பல சொன்னால் நானும் உம்மைப் பற்றிச் சொல்ல முடியும். அன்று சந்திர சேகரன் உமக்கு விருந்து வைத்தபோது நீர் நன்றாகக் குடி த்து விட்டு ஆடவில்லையா?' என்றான்.

அதற்கு அப்பெரியார், 'உங்களுடைய போக்கெதை எவ்வளவு தூரம் இருக்கிறதென்பதை நன்றாக அறிந்துகொள் வதற்காக நானும் அந்தமாதிரி நடந்துகொள்ள வேண்டிய தாயிற்று. நான் மறுநாள் எழுதிய கடிதத்தில் அதை நன்கு விவரித்திருந்தேன். இப்போது அந்தக்கதையெல்லாம் வேண் டாம். மதனவல்லிச் சீமாட்டி சொல்லப்போவதைக் கேட்ப தில் உன் கவனத்தை நன்றாகச் செலுத்து,' என்றார். அவ னும் மதனவல்லிச் சீமாட்டியைப் பார்த்து, 'என்ன அது. நீங்கள் சொல்லப்போவதுதான் என்ன?' என்று கேட்டான். அப்போது ஷண்பகவல்லிசீமாட்டி தன் தலையை சாய்த்துக் கொண்டு செல்வநாதரின் அருகிலேயே உட்கார்ந்திருந்தாள். அப்போது மதனவல்லிசீமாட்டி, 'தினகரம், இப்போது நான் அதிகமாக ஒன்றும் பேச விரும்பவில்லை. எனினும் ஷண்பகத் துக்கு நீ மணந்துகொள்வதென்று நிச்சயிக்கப் பட்டிருக்கும் போது இப்படிப்பட்ட சம்பந்தம் வைத்துக் கொண்டிருக் கிறாய் என்றால் அது அவமானத்தைத் தரத்தக்கதே. ஆகவின் இந்த விவாக ஒப்பந்தத்தை நான் ரத்து செய்துவிட விரும்பு தில் நீ ஆச்சர்யப்பட மாட்டாய் என்றே நம்புகிறேன்' என் றாள். அதற்கு அவன், 'நான் அப்படி நேருமென்று நினைக் கவேயில்லை. ஷண்பகம் என்னை மனமார நேசிக்கிறாள் என்

பதை நான் அறிவேன். அதற்கென்ன, இச்சமயத்தில் சிறிது வருத்தம் ஏற்பட்டிருக்கலாம்' என்றான். அப்போது மதன வல்லிச் சீமாட்டி, 'ஏன், ஷண்பகமும் இங்கேதானே இருக்கிருள். அவளுடைய அபிப்பிராயத்தை அவள் பகிரங்கமாக இவ்விடத்தில் சொல்லிவிடட்டும்.' என்று உரக்கச் சொன்னுள். அச்சமயம் ஷண்பகவல்லியும் மெதுவான குரலில் பெருந்தன்மையான தோரணையில், 'நான் கண்டிப்பாக சொல்லிவிடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. தினகரம் பிரபுவே! நம்மிருவரிடையே விவாகம் நடக்க வேண்டுமென்று ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தம் இன்றே ரத்தாகிவிட வேண்டுமென்றுதான் நான் ஆசைப்படுகிறேன்' என்று வெட்ட வெளிச்சமாகக் கூறினுள்.

இதைக்கேட்ட தினகரம் பிரபு அதிக ஆத்திரத்தினுலும் கோபத்தினுலும் தூண்டப்பட்டுத் தன் ஆசனத்தை விட்டு எழுந்து செல்வநாதரை நோக்கி, 'செல்வநாதரே! இதெல்லாம் உம்முடைய சேஷ்டைதான் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. நீர் எல்லா விஷயங்களிலும் அநாவசியமாகத் தலையிடுகிறீர். முதலில் என் தாயாரைத் தொந்தரை செய்தீர்கள் இப்போது என் விஷயத்தில் தலையிட்டிருக்கிறீர்கள். இதற்கெல்லாம் அர்த்தமென்ன? நீர் யார் என்பதையாவது தயவு செய்து தெரிவியுங்கள்' என்றான். அப்போது செல்வநாதர் தினகரனை உற்று நோக்கியவண்ணம், 'தினகரா! என்னிடம் உன்னுடைய கைவரிசையையெல்லாம் காண்பிக்காதே. உன்னைப்போன்ற ஒரு ஆடவனுகிய என்னுடனேயே இவ்வளவு விவகாரம் நடத்தும் நீ பெண்கள் தனியே இருந்தால் சும்மா விட்டுவிடுவாயா?' என்று கேட்டார். அப்போது தினகரன்

'ஐயா, பெரியாரே, சாதாரண விஷயத்தை அவ்வளவு தூரத்துக்கு எடுத்துக்கொண்டு போய்விட வேண்டாம்' என்று சொல்லிவிட்டு பின்னர், மதனவல்லிச் சீமாட்டியைப்பார்த்து, 'சீமாட்டியே, நடந்துபோன விஷயத்துக்காகக் கோபிக்க வேண்டாம். என்னை மன்னித்துவிடு. ஷண்பகவல்லியை விட்டுப்பிரிய என் மனம் இசையவில்லை. இனி நான் ஒழுங்காக நடந்துகொண்டு யோக்கியதையாக வாழ்க்கையை நடத்துகிறேன். நான் பஞ்சநதம் பிரபுவுடன் அன்னிய நாட்டுக்குப் போய் இரண்டுமூன்று மாதங்கள்வரை காலங்கழிக்கலாமென யோசித்திருக்கிறேன். நான் அனுபவித்த வாழ்க்கையில் எனக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. நீ விரும்பினால் நான் இங்கேயே இருந்து எவ்வளவு யோக்கியனாய் விட்டேன் என்பதைக் காட்டிக் கொள்ளுகிறேன்' என்று பணிவுடன் தெரிவித்துக் கொண்டான்.

அதைக்கேட்ட மதனவல்லிச் சீமாட்டி சற்று அன்பான தோரணையில் இனிமையான குரலில், 'தினகரா! இப்போது நீ சொன்னதைக் கேட்டுச் சந்தோஷப்படுகிறேன். இனி நீ திருந்திவிடுவாய் என்பதையும் நான் உண்மையிலேயே நம்புகிறேன். பஞ்சநதம் பிரபுவைப்போன்ற ஒரு கண்ணியமான பெரிய மனிதருடன் நீ வெளிநாட்டுக்குச் சென்று சொற்பகாலம்வரை இரத்தினபுரியில் இல்லாமல் இருப்பது நல்லதே' என்று சொல்லிக்கொண்டிருந்தபொது பஞ்சநதம் பிரபு என்ற சொல்லைக்கேட்ட செல்வநாதர் பெருமூச் செறிந்ததை அனைவரும் கண்டார்கள். எனினும் அப்பெரியார் விரைவில் அதை அடக்கிக்கொண்டதால் மற்றவர்களுடைய கவனம் அங்கு அதிகமாகச் செலுத்தப்படவில்லை. ஆகவே மதனவல்லி மேலும் பேச ஆரம்பித்து, 'தினகரா! நீ வெளிநாடு செல்வது

நலமே. ஆயினும் இப்போது நான் சொன்ன முடிவு இனி மாற்றப்படக் கூடாததேயாகும். ஷண்பகவல்லியை இனி நீ ஒரு அறிமுகமானவளாகக் கருதலாமேயொழிய மனைவியாகப் போகிறவள் என்று நினைக்க முடியாது. இந்த விவாக ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு விட்டதாக ஹேமவதி சீமாட்டிக்கும் நாளைய தினம் கடிதமூலம் அறிவித்து விடுகிறேன்' என்றாள். அப்போது அதிக ஆக்கிரமடைந்த தினகரன் செல்வநாதரைக் கண்டு பலவாறு தூஷித்துக் கூறிவிட்டு அவ்வறையினின்றும் வெளியே போய் அவ்வறையின் கதவைத் தடாலென்று சாத்திக்கொண்டு வெளியேறினான். அவன் சென்ற சொற்ப நேரத்துக்குப் பின்னர் செல்வநாதரும் அம்மாளிகையை விட்டுப்புறப்பட்டுத் தம் வண்டியில் ஏறிக்கொண்டு மோகனதாஸ் வசிக்கும் மாளிகைக்குச் செலுத்தும்படி கட்டளையிட்டார்.

அங்கே அம்மாளிகையையடுத்துள்ள தோட்டத்தில் மோகனதாஸும் அவனுடைய சகோதரியான ராஜலட்சுமியும் உலாத்திக் கொண்டிருந்தார்கள். மோகனதாஸ் ஷண்பகவல்லியை நேசிக்கிறான் என்பதையும், அதில் அவன் வெற்றி பெறுவான் என்பதையும் ராஜலட்சுமி நன்கு அறிந்துகொண்டிருந்தாள். மேலும் செல்வநாதர் இது விஷயமாக மதனவல்லிச் சீமாட்டியிடம் பேசித் திருப்திகரமான முடிவுக்குக் கொண்டுவந்து விடுவார் என்றும் இருவரும் நம்பினார்கள். ஆகவே அவர்களுடைய நம்பிக்கையின்படியே செல்வநாதரும் மதனவல்லிச் சீமாட்டியைக் கண்டு அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்துவிட்டுத்தான் வந்தார். செல்வநாதரைக்கண்ட மோகனதாஸும், ராஜலட்சுமியும் அவரை மிக்க அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்றார்கள். அவர் காலையில் தன் வீட்டைவிட்டுப் புறப்பட்டது முதல் எவ்வித ஆகாரமும் எடுத்துக்கொள்ளாமல் இருந்ததால் அப்போது அவர்

கள் அன்புடன் கொடுத்த சிற்றுண்டியைத் திருப்தியுடன் ஏற்றுக்கொண்டார். அவர் பஞ்சநதம் பிரபுவின் வீட்டில் கேள்விப்பட்ட செய்திகளால் தனக்கு ஏற்பட்ட துக்கத்தை அங்கு யாரிடமும் பிரஸ்தாபிக்கவில்லே. ஆனல் அவர் அங்கு வந்த வேலையைப்பற்றி அவர்களிடம் பின் வருமாறு கூறினர்:—

"அன்பர்களே! நான் நாலேந்து தினங்களுக்கு முன் மதனவல்லிச் சீமாட்டிக்குக் கடிதம் எழுதியபோது அவள் உடனே ஷண்பகத்தை அழைத்துக்கொண்டு இரத்தினபுரிக்கு வந்துவிட வேண்டுமென்றும், ஹேமவதி சீமாட்டியுடன் வசிப்பது தகாதென்றும், அவளுடைய இழிகுணங்கள் இன்னவையென்றும் விவரமாக எழுதியதாகத் தெரிவித்தேனல்லவா? மதனவல்லி பூராவிவரத்தையும் தெரிந்துகொள்ளாமல் ஹேமவதி சீமாட்டியுடன் சண்டை போட்டுவிடக்கூடாதென்னும் எண்ணத்துடன் ஏதோ அவசர வேலையாக இரத்தினபுரிக்குச் செல்லவேண்டுமென்று தெரிவித்து விட்டு நேற்று இவ்விடம் ஷண்பகத்துடன் வந்து சேர்ந்தாள். நான் சிறிது நேரத்துக்கு முன்புதான் அவர்கள் மாளிகைக்குச் சென்று அவர்களுடன் பேசினேன். அதன் பயனுக மதனவல்லி உன்னுடைய உண்மையான உயரிய குணுதிசயங்களே அறிந்து உன்னே என்றுமில்லாத வகையில் கண்ணியமாகப் போற்றுகின்ருள். ஹேமவதி சீமாட்டி உன்னேப்பற்றிக் கூறிய புகார் பொய்யானதென்றும், உண்மையில் நடந்தது என்னவென்றும் அவள் தெரிந்துகொள்ள இடமுண்டாயிற்று என்று நான் சொல்லவேண்டியதில்லே. முக்கிய விசேஷம் ஒன்று மட்டும் சொல்லவேண்டும்; அதாவது ஷண்பகவல்லியைத் தினகரனுக்குக் கொடுத்து மணமுடிப்பதென்னும் ஒப்பந்தத்தை மதனவல்லிச் சீமாட்டியும், ஷண்பகவல்லியும் சேர்ந்து

ரத்து செய்துவிட்டார்கள். அதை அவர்கள் தினகரனிடம் சொல்லி விட்டதுடன் ஹேமவதிக்கும் நாளைய தினம் அறிவித்து விடுவார்கள். ஆதலால் இனி ஷண்பகவல்லியின் காதலன் நீயே என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.''

இந்த சந்தோஷச் செய்தியைக் கேட்டதும் மோகனதாஸ் அளவிலா ஆனந்தமடைந்து, அப்பெரியாருக்கு நன்றி செலுத்தும் முறையில் அவர் முன் மண்டியிட்டு வணங்கியதுடன் அவரது கரத்தைப் பிடித்து ஆர்வத்துடன் அழுத்தினான். ராஜலட்சுமியின் அழகிய கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் சொட்டலாயிற்று. இப்படிப்பட்ட சந்தோஷக் காட்சியைக் கண்டு அதற்குக் காரணஸ்தரான செல்வநாதரும் திருப்தியும் சந்தோஷத்தையும் அடைந்தார். சொற்ப நேரம் அங்கிருந்த பின்னர் செல்வநாதர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுத் தன் வீட்டுக்குச் செல்லும் வழியில் கோகிலத்தின் வீட்டில் இறங்கித் தான் சபாபதியையும், இந்திராபாயையும் சந்தித்துப் பேசிய முழு விவரத்தையும், கோகிலம் சபாபதியைக் காதலனாக அடையலாம் என்னும் நிச்சயத்தையும் சொல்லி அவர்களுக்கு ஒருவித திருப்தியை ஏற்படுத்திவிட்டுத் தன் மாளிகைக்குச் சென்றார். இவ்வாறாகப் பெரியார் செல்வநாதர் பிறருடைய சுகங்களை அதிகரிப்பதிலேயே தனது காலத்தையெல்லாம் செலவழித்து வந்தார்.

மறுநாள் காலை பதினொருமணி சுமாருக்குச் செல்வநாதர் தனது வண்டியில் ஏறிக்கொண்டு இந்திராபாய் வசித்து வரும் ஊருக்கப்பாலுள்ள சிறு மாளிகைக்குச் சென்றார். இந்திராபாயும் அவரை மரியாதையாக வரவேற்றுத் தன் சகோதரனை மோகனசுந்தரமும், சபாபதியும் வெளியில் சிறிது

உலாவிவிட்டு வருவதற்காகச் சற்று நேரத்துக்கு முன்புதான் சென்றதாகத் தெரிவித்தாள். அப்போது அவர், 'அம்மணி! அவர்கள் இல்லாமலிருப்பதும் எனக்குச் சந்தோஷத்தையே தருகிறது. ஏனெனின், நான் முக்கியமான பல விஷயங்களைப் பற்றி உன்னிடம் பேசவேண்டியதாக இருக்கிறது. இரண்டு அல்லது மூன்றுமணி சாவகாசம் வரை என்னுடன் பேச உன்னால் சாத்தியப்படுமா?' என்று கேட்டார். அதற்கு அவள், 'அப்படியே ஆகட்டும்' என்று உறுதி கூறினளென் ருலும் அவரது முகத்தில் ஒருவித விசனக்குறி காணப்படுவ தைக்கண்டு வருத்தப்பட்டாள். செல்வநாதரும் தனது வண் டிக்காரனை வீட்டுக்குச் செல்லும்படியும் பகல் இரண்டு மணி க்கு வண்டியைக் கொண்டுவரும்படியும் கட்டளையிட்டுவிட்டு இந்திராபாயுடன் அம்மாளிகையின் முக்கிய அறைக்குச் சென்றார். அவ்வறையில் சென்றதும் இந்திராபாய் கதவை உள்பக்கம் தாளிட்டுக்கொண்டு செல்வநாதரைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துப் பின்னர், 'பெரியாரே, தாங்கள் என்னை வெறுக்கவில்லையா? என்னிடம் தங்களுக்கு அருவருப்பு ஏற் பட்டிருக்கிறதல்லவா?' என்று கண்ணீர் ததும்ப துக்கத் துடன் கேட்டாள். அப்போது செல்வநாதர் அவளுடைய கையை அன்புடன் பிடித்துக்கொண்டே தன் கண்களில் நீர் சொரிய, 'பெண்ணே, அப்படியொன்றுமில்லை. உன்னைப் பற்றி நான் ஏதோ தெரிந்துகொண்டு விட்டதாக நீ நினைக்கி ருய்போலும்' என்று கேட்டார்.

அப்போது இந்திராபாய் தன் உண்மையான நிலைமையை அறிந்து துக்கப்பட்டவளாய் அழுதுகொண்டே, 'ஆம், தாங் கள் நடந்துகொள்ளும் முறையிலிருந்தே என் சங்கதியெல் லாம் தங்களுக்குத் தெரிந்துவிட்டதென்று நன்கு தெரிகிறது

அப்படியிருந்தும் தாங்கள் மறுபடியும் என் முகத்தைக் காண இங்கு வந்திருப்பதும், என்னிடம் அனுதாபத்துடனும் அன்புடனும் நடந்துகொள்வதும் எனக்கு ஆச்சர்யத்தையே அளிக்கிறது ஆதலால் பெரியாரே! தாங்கள் யார் என்பதைச் சொல்லுங்கள். தாங்கள் யார் என்னும் இக்கேள்வியை இந்த இரண்டொரு தினங்களில் ஆயிரம் முறை என் மனதிலேயே கேட்டுக்கொண் டிருக்கிறேன்' என்றாள். அதற்கு அவர், 'பெண்ணே, இப்போது அதைச் சொல்ல முடியாது. எனினும் விரைவில் அதைச் சொல்லிவிடுகிறேன். தற்காலம் நான் உங்கள் விஷயத்தில் அதிக சிரத்தை கொண்டவன் என்பதை மட்டும் அறிந்தால் போதுமானது' என்றார். அதற்கு அவள், 'ஆம் அதில் ஒன்றும் சந்தேகமில்லை. தாங்கள் நேற்று இவ்விடம் வந்தபோது எங்களுக்காக அளித்த பெருத்த நன்கொடையிலிருந்தே தங்களுக்கு எங்களிடம் எவ்வளவு அன்பும் சிரத்தையும் இருக்கிறதென்பது நன்றாகத் தெரிகிறது. ஆயினும் அவ்வளவு பெரிய தொகையைப் பெற்றுக்கொள்ள என்மனம் துணியவில்லை. மேலும் என்னுடைய யோக்கியதையைத் தெரிந்து கொண்ட தாங்கள், நான் தங்களுடைய உதவியைப் பெறச் சிறிதும் அருகதை யில்லாதவள் என்பதை அறிந்திருக்கலா மல்லவா? ஆதலால் தாங்கள் நேற்று கொடுத்துவிட்டுப் போன செக்கை இதோ திருப்பிக் கொடுக்கிறேன்,' என்று கூறிக்கொண்டே அதைத் திருப்பிக் கொடுக்கப் போனாள். அதற்கு அவர், 'இல்லை. இல்லை. நீயே வைத்துக்கொள். அதனாலொன்றும் பாதகமில்லை. இதைவிட இன்னும் பத்து மடங்கு அதிகமாக உங்களுக்குத் தர நான் கடமைப்பட்டிருக்கிறேன்,' என்றார். அதற்கு அவள், 'தாங்கள் கடமைப்பட் டிருப்பதாகத் தோன்றவில்லை. ஆனால் நான்தான் என்னுடைய நடத்தைக்காக வெல்லாம் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது,'

என்றாள். அதைக் கேட்ட செல்வநாதர், 'பெண்ணே, உன்னைக் கண்டிப்பதற்காக இப்போது நான் இங்கு வரவில்லை. நீ பிராயச் சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லும் உன் பழைய வரலாற்றை உன்னிடமிருந்தே நேரில் விவரமாகக் கேட்டு அறியவே நான் வந்திருக்கிறேன். நீ எதையும் மறைக்காமல் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்வாய் என்று நம்புகிறேன்,' என்றார்.

அப்போது இந்திராபாய் அதிக உண்மைப் பற்றுதலுடன், 'இல்லவே இல்லை. ஒரு வார்த்தையையும் மறைக்க மாட்டேன். நீங்கள் என்னிடம் நடந்துகொள்ளும் தன்மையே என் சங்கதிகளை யெல்லாம் தானகக் காந்தம்போல் இழுத்து விடும்போலத் தெரிகிறது. அதைக் கேட்க உங்களுக்கு உரிமை உண்டு என்னும் எண்ணம் என் மனதில் எப்படியோ உதயமாகி இருக்கிறது. முன்பு வந்திருந்த போதே சொல்லாமற் போனேனே என்று நினைத்ததுமுண்டு. நீங்களாகச் சில விஷயங்களைத் தெரிந்துகொண்டு விட்டபடியால் இனி இவ்விடம் வராமல் நின்று விடுவீர்களோ என்றும் நான் சந்தேகித்ததுண்டு,' என்று வருத்தத்துடன் கூறினள். அதற்கு அப்பெரியார், 'இல்லையம்மா! நான் வராமல் இருப்பேனு? அப்படி இருக்கமாட்டேன் என்பதற்கு இப்போது வந்திருக்கிறேனே, அதுவே யொரு அத்தாட்சியாகும். நான் உன்னை எவ்விதத்தும் குறை கூற மாட்டேன் என்று உறுதி மொழி கூறியிருப்பதால் நீ தயவு செய்து காலதாமதமின்றி உன் வாழ்க்கை சம்பந்தமான இரகசியத்தை விவரமாகச் சொல்லவும். ஒன்றையும் மறைக்க வேண்டாம். நீ என்ன சொன்ன போதிலும் அதற்காக நான் கோபமடையேன்? அதற்குப் பதிலாக அனுதாபமே அதிகமாகும் என்பது நிச்சயம். நீ என்னை நீண்டகாலமாக அறியவில்லை யென்றாலும் இந்த

சொற்ப காலத்திலேயே என் உறுதியை நம்பும்படியான நிலைமை ஏற்பட்டிருக்குமென்று நினைக்கிறேன்,' என்றார். அதற்கு இந்திராபாய், 'தாங்கள் இவ்வளவு தூரம் சொல்ல வேண்டியதேயில்லை. தங்களிடம் எல்லா வற்றையும் தெரிவித்துக் கொள்கிறேன்,' என்று கூறிக்கொண்டே அவரது அருகில் உட்கார்ந்து தன்பழைய சரித்திரத்தையெல்லாம் சொல்ல ஆரம்பித்தாள்.

77-வது அத்தியாயம்

:():

இந்திராபாயின் பூர்வ சரிதை.

செல்வநாதரிடம் தன் பூர்வ சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கிய இந்திராபாய், தான் சிறு குழந்தையாய் இருந்தபோது இரத்தினபுரிக் கப்பாலுள்ள ஒரு குடிசையில் ஒரு வயதான மாதினிடம் வளர்க்கப்பட்ட தாகவும், ஒரு பிரபு வந்து விசாரித்ததாகவும் தன் எட்டாவது வயதில் அக்கிழவி மற்றொரு குழந்தையைக் கொண்டு வந்து அது தன் சகோதரன் என்று சொல்லி அதையும் வளர்த்ததாயுங் கூற ஆரம்பித்து அவர்களிருவரும் அடிக்கடி மற்றொரு அழகிய மாதினிடம் எடுத்துச் செல்லப்பட்டதையும், அம்மாது அவர்களை அன்புடன் வரவேற்றுத் தழுவியதாயும் பின்னர் அவர்கள் ஒரு தர்ம பாடசாலையில் சேர்க்கப்பட்ட விதத்தையும் பிறகு தான் பச்சையப்பர் வீட்டில் வளர்க்கப்பட்டதையும், பச்சையப்பர் அவளை மிகக் கொடுமையாக நடத்தியதுடன் பரிதிபுரம் அழைத்துச் சென்று துளசிங்கம் பிரபு என்னும் ஒருவனுக்கு விவாகம் செய்து கொடுத்து உடனே இருவரை

யும் பிரித்துவிட்டதாகவும், பின்னர் அவள் கஷ்டத்துடன் வெளியேறியபோது ஒரு பணக்கார மாது அவளை வேலையில் அமர்த்திக்கொண்டதாகவும், ஆனால் அம்மாதின் குமாரன் அவள்மீது காதல்கொண்டு அவளைத் துன்புறுத்தியதால் அவ்விடத்திலிருந்தும் வெளியேற வேண்டியதாயிற்று என்றும் அப்போதுதான் நாகபுரியில் இருந்த ஓட்டலில், தன்னுடன் முன்பு படித்த கமலவதியின் தந்தை சொந்தக்காரனாக இருப்பது கண்டு திருப்தியடைந்ததாகவும், பின்னர் அங்கிருந்து வெளியேறியபோது ஒரு கொள்ளைக் கூட்டத்தாரிடம் அகப்பட்டுக்கொண்டு வருந்தி அவர்களுடைய தொழிலைக் கற்றுக்கொண்டதாகவும் பிறகு தன் பெயரைச் சந்திராபாய் என்று மாற்றிக் கொண்டதாகவும், அப்போதெல்லாம் பச்சையப்பர் இரத்தினபுரியிலுள்ள ஒரு வக்கீலின் மூலம் தனக்குப் பணம் கொடுத்து வந்ததாயும், இடையில் முன்பு தான் கலியாணம் செய்துகொண்ட துளசிங்கம் பிரபுவைச் சந்தித்தபோது அவனை விவாக பந்தத்தினின்றும் விடுதலை செய்து வைத்து அது சம்பந்தமான தஸ்தாவேஜ்களை நடுக்குப்பத்திலுள்ள ஒரு கொள்ளைக்காரன் மூலம் கொடுத்தனுப்பியதாகவும், பிறகு ராட்சஸ குப்பனுடன் சேர்ந்துகொண்டு மனமோகனனையும் தேவிதாசரையும் கொள்ளை யடித்ததையும், பின்னர் தப்பித்துச் சென்று கமலவதின் உதவியால் நாகபுரி கோர்ட்டிலும் தானே ஜெயித்ததையும், சிலநாட்களுக்குப் பின்னர் இரத்தினபுரியின் ஒரு தெருவில் மோகனசுந்தரத்தைக் கண்டதும், அவன் மூலம் பஞ்சநதம் பிரபுவின் வீட்டில், தன் தாயார் என்று நம்பப்பட்ட மாதின் படம் இருப்பதை யறிந்து அங்கு போய் அதை அடித்துக்கொண்டு வந்த விதத்தையும், அப்படம்தான் சபாபதியும் தன் தாயார் என்று கருதும் இரங்கநாயகிச் சீமாட்டியின் படமென்றும், சபாபதியின் விஷயத்தைக் கண்டு பிடிப்பதற்காகத்தான் எடுத்துக்கொண்ட எல்லா

முயற்சிகளையும் அதன் மூலம் கண்டுபிடித்துள்ள விஷயங்களை யும், பிறகு வக்கீல்களிடம் சென்று தந்திரமாக சங்கநாயகிச் சீமாட்டி இருக்கும் இடத்தை அறிந்து வந்ததையும் விவரமா கக்கூறிவிட்டு இறுதியில் செல்வநாதரே, 'நான் எல்லா உண் மைகளையும் மரணப் படுக்கையிலிருந்து கூறுவதுபோல் கூறி விட்டேன். ஆகவே என் முழுச் சரித்திரமும உங்கள் முன் இருக்கிறது. இனி நீங்கள் என்னைப்பற்றி என்ன நினைத்தா லும் சரி, நான் உண்மையைக் கூறிவிட்டேன் என்னும் திருப்தி எனக்கு ஏற்பட்டுவிட்டது. என்னிடம் அருவருப் பாகவோ கடுமையாகவோ நடந்துகொள்ள மாட்டீர் என்று மட்டும் நம்புகிறேன்' என்று கூறி முடித்தாள்.

அதையெல்லாம் மிக்க கவனத்துடன் கேட்டுக்கொண் டிருந்த செல்வநாதர், 'அம்மா! உன்னை நான் தூஷிக்கவே மாட்டேன். இது உன்னுடைய குற்றமே அல்ல. அந்த இருவரும் தங்கள் கடமையைச் சரியாக நிறைவேற்றி யிருந் தால் உனக்கு இப்படிப்பட்ட நிலைமையே ஏற்பட்டிராது. மற்றொரு ஆசாமியும் பெரிய தவறு இழைத்திருக்கிறான். இருக்கட்டும், பழைய சங்கதிகளை இப்போது நினைத்துக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. ஒரு விஷயத்தில் உன் னைக் கண்டு சந்தோஷப்பட வேண்டியதாகத் தான் இருக் கிறது. பெண் என்னும் முறையில் நீ உன் கற்பினின்றும் தவறிவிட வில்லை. இரண்டொரு சமயங்களில் உன்னைக் கெ டுக்க முயற்சிக்கப்பட்டபோதும் நீ சாமர்த்தியமாகத் தப்பி யிருக்கிறாய். நாகபுரியிலிருந்து துளசிங்கம் பிரபு உனக்கு எழு திய கடிதத்தை நேற்று காண்பித்தா யல்லவா? அதை மறு படியும் இப்போது காண்பி,' என்று கேட்டதும் இந்திரா பாயும், 'அப்படியே ஆகட்டுமென்று சொல்லித் தன் மேஜை யிலிருந்த அக் கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். அக்

கடிதத்தில் பின் வருமாறு வரையப்பட்டிருந்தது. 'ஐந்து வருஷங்களுக்கு முன் பரிதிபுரத்தில் ஆச்சர்யமான விதத்தில் நடந்த நமது விவாகமென்னும் சடங்கிற்குப் பின்னர் அது சம்பந்தமாய் நீ கௌரவமாக நடந்து கொண்டு என்னை அந்த விவாக பந்தத்தினின்றும் விடுதலை செய்ததற்காக உனக்கு நன்றி செலுத்த எனக்குச் சந்தர்ப்பமே கிடைக்காமற் போயிற்று. இப்போது நான் தங்கியிருக்கும் ஓட்டல் சொந்தக்காரரின் மூத்த குமாரியாகிய கமலவதி உனக்கு நெருங்கிய சிநேகிதையாக இருப்பதால் அவள் எனக்கு இன்று அதிக உதவி செய்தாள். அது என்ன என்பதை அவளே உன்னிடம் தெரிவிப்பாள். நான் பச்சையப்பர் வீட்டுக்குச் சென்றிருந்தபோது அங்கு ஒரு கடிதம் கண்டேன். அதிலிருந்த ஒரு ஆச்சரியமான விஷயத்தை உனக்குத் தெரிவிக்காமலிருக்க முடியவில்லை. அதாவது அதில், மோகன சுந்தரமும் அவனது சகோதரியும் தாங்களும் மனோகரம் பிரபுவின் மக்களே என்பதைத் தெரிந்துகொள்ள அவர்களால் முடியப்போவதில்லை என்று எழுதப்பட்டிருந்தது. இதை உனக்குத் தெரிவிப்பதால் உனக்கு ஏதேனும் நன்மை உண்டாகுமாயின் அதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுவேன். நீ எனக்குச் செய்த நன்றிக்காக நான் உன்னை எப்போதும் மறவேன்.'

செல்வநாதர் அக்கடிதத்தைப் படித்து முடிந்த பின்னர் அதை இந்திராபாயினிடமே கொடுத்துவிட்டுச் சிறிது நேரம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தார். அப்போது வெளியே சென்றிருந்த சபாபதியும் மோகனசுந்தரமும் திரும்பி வருவதைக் கண்ட இந்திராபாய், 'ஐயா, அவர்கள் இருவரும் வந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குள் தாங்கள் யார்? எங்கள் விஷயத்தில் இவ்வளவு கவலை செலுத்தவேண்டியதன் அவசியமென்ன? அதை நான் தெரிந்துகொள்ள அளவு கடந்த

ஆவனுடன் இருக்கிறேன். ஆதலால் தயவுசெய்து ஒருவார்த்தையில் விஷயத்தை விளக்கிவிடுங்கள்' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். அப்போது அவரும் அதற்குச் சம்மதித்து மிக அவசரமாக, 'நான் மனோகரம் பிரபுவின் அந்தரங்க நண்பன்' என்று சொன்னார். அப்போது அவள் ஏதோ பேசப் போனபோது 'ஒன்றும் பேசாதே. உன் தந்தையின் அந்தரங்க நண்பன் என்னும் முறையிலும், எல்லா இரகசியங்களையும் அறிந்தவன் என்னும் முறையிலும் உங்கள் நன்மையை உத்தேசித்து இப்போதே சில நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள எனக்கு அதிகாரமிருக்கிறதென்றே நம்புகிறேன்' என்றார். அதற்கு அவளும், 'அப்படியே செய்யுங்கள். உங்களிஷ்டப்படி நடந்துகொள்ள நான் தயாராக இருக்கிறேன்' என்றாள். அச்சமயத்தில் சபாபதியும் மோகனசுந்தரமும் கூட அவ்வறையில் வந்துவிட்டார்கள். எல்லாருமாகச் சிற்றுண்டி அருந்தியதும் செல்வநாதர், 'இப்போது நீங்கள் இந்த இருப்பிடத்தை மாற்றிவிடவேண்டும். என் மாளிகையில் வந்து வசிக்கவேண்டும். ஆகவே புறப்படுவதற்குத் தயாராகுங்கள். என் வேலைக்காரர்கள் சிலர் பிறகு இங்கு வந்து உங்கள் பெட்டி முதலானவைகளைக் கொண்டுவருவார்கள். சபாபதியும், மோகனமும் போய் உங்கள் சாமான்களை எடுத்துக்கொள்ளுங்கள். இந்திராபாய் மட்டும் இங்கு இருக்கட்டும்' என்றார். உடனே சபாபதியும் மோகனமும் போய்விட்டார்கள். பின்னர் செல்வநாதர் இந்திராபாயிடம், 'பெண்ணே! உன் சாமான்களையெல்லாம் நீ விற்றுவிட வேண்டும். உடனே உன்னிடமுள்ள இரண்டு புறுக்களையும் கமலவதியிடமே அனுப்பிவிட்டு உன் நிலைமையில் ஒழுங்கான மாறுதல் ஏற்பட்டிருப்பதால் இனி அவை உனக்குத் தேவையில்லை. யென்று தெரிவித்துவிடு. பிறகு உன் சாமான்களை எடுத்துக்கொண்டு புறப்படத் தயாராகு. உன் வேலைக்காரியை

அனுப்பிவிட்டுப் போ' என்றார். அவரது கட்டளை மீறமுடியாததாக இருந்தது. ஆகவே அவள் அவ்வாறே சென்றதுடன் வேலைக்காரியையும் செல்வநாதரிடம் அனுப்பினாள்.

வேலைக்காரியைப் பார்த்துச் செல்வநாதர், 'மாதே! இந்திராபாயினிடம் நீ இதுவரை உண்மையாக நடந்துகொண்டதை நான் பாராட்டுகிறேன். இனி அவர்கள் இங்கிருக்க முடியாது. அவளுடைய இரகசியமும் உனக்குச் சில தெரியும். அதை நீ வெளியில் எங்கும் விடக்கூடாது. அதற்காகவே இந்த விடத்தையும் இதிலுள்ள சாமான்களையும் உனக்கே கொடுத்து விடுகிறேன். மேலும் இப்போது அவசர செலவுகளுக்காக உனக்கு இருபத்தைந்து பவுன் தருகிறேன். நீ இந்திராபாயின் இரகசியத்தை மூடி வைப்பதற்காக ஆறுமாதத்துக்கொருமுறை உனக்கு இருபத்தைந்து பவுன் தரப்படும். அவளது ஆண் உடையை எடுத்து எரித்துவிடு. நான் இப்போது வந்து பார்ப்பேன். இந்தா, இப்பணத்தை எடுத்துக்கொள். என்னைப் பார்த்துக் கொண்டு நிற்பதில் பயனில்லை,' என்று கூறினார். செல்வநாதர் கண்டிப்பான முறையில் சொல்வதால் அதை மீறலாகாதென வேலைக்காரி அறிந்துகொண்டு அவர் கொடுத்த பணத்தைப் பெற்றுக்கொண்டு அவரது கட்டளைப்படி செய்யப் போனாள். அவரும் இரண்டொரு நிமிஷத்துக்கெல்லாம் சமையல் அறைக்குச் சென்று அவ் வேலைக்காரி இந்திராபாயின் ஆண் உடையை எரித்துவிட்டாளா என்று பார்த்தார். பிறகு அவர், 'சரிதான், என் இஷ்டப்படி நீ செய்ததற்காகச் சந்தோஷப்படுகிறேன். இந்திராபாயின் குதிரை ஒன்று இருக்கிறதல்லவா. அதையும் விற்று அப்பணத்தை நீயே எடுத்துக்

கொள்,' என்று சொல்லிவிட்டு அவர் வீட்டின் முன் அறைக்குச் சென்றார்.

அங்கே இந்திராபாயும், சபாபதியும்,மோகன சுந்தரமும் ஒன்றாகக் கூடினார்கள். புருக்களைக் கமலவதிக்கு அனுப்பி விட்டதாகத் தெரிவித்தாள் உடனே எல்லாருமாகச் செல்வநாதரின் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். வண்டியும் செல்வநாதரின் மாளிகையை நோக்கிப் புறப்பட்டது. செல்லும் வழியில், அப்பெரியார் இந்திராபாயை நோக்கி, 'பெண்ணே, இனி நீ குழந்தைப்பருவத்தில் பெற்றிருந்த நவநீதம் என்னும் பெயருடன் விளங்க வேண்டும். என் வீட்டில் உன்னை எல்லாரும் அப்படித்தான் அழைப்பார்கள்,' என்றார். அதைக் கேட்ட மோகனசுந்தரம், அவள் தங்களுடைய பழைய சரித்திரங்களையெல்லாம் அவரிடம் சொல்லிவிட்டிருக்கிறார் என்பதை அறிந்து தன் சகோதரியை உற்றுப் பார்த்தான். தன் சகோதரி பழைய பெயரை அடையும்படி நேரிட்டதற்காக மிகவும் சந்தோஷமடைந்தான். ஆனால் இடையே பல துக்க சம்பவங்களும் ஞாபகத்துக்கு வராமல் போகவில்லை. சபாபதியோ உலகத்துக்கே புதியவனாக இருந்தவனாதலால் அவனுக்கு அவர்களுடைய சம்பாஷணை ஒன்றுமே விளங்கவில்லை. செல்வநாதர் கூறுகிறபடியே நடக்க நமது இந்திராபாய் தயாராக இருந்தாள். இதற்குள் வண்டியும் செல்வநாதரின் மாளிகையை அடைந்தது. நவநீதம், சபாபதி, மோகன சுந்தரம் ஆகிய மூவருக்கும் தனித் தனியே அழகான அறைகள் கொடுக்கப்பட்டன. சபாபதிக்கும் மோகனசுந்தரத்துக்கும் தேவையான விஷயங்களைக் கவனித்து வேலைசெய்வதற்காக ஒவ்வொரு சேவகர் நியமிக்கப்பட்டனர். ஹேமவதி சீமாட்டியின் மாளிகையில் சேவகனாக இருந்த மோகனத்துக்கு இப்போது ஒரு வேலைக்காரன் ஏற்பட்டான். இவ்வாறு மேடு

பள்ளமாவதும், பள்ளம் மேடாவதும் உலக இயற்கை. உலகைக் கட்டியாளும் அரசர் பின்னர் தனி வழியே நடந்து செல்ல வேண்டிய நிலைமையும், பிச்சைக்காரனாகவும், ஊழியனாகவும், இருந்தவன் பின்னர் அரசனாகவும், செல்வந்தனாகவும் ஆவதும் இயற்கையே யொழிய அதில் அற்புத மொன்றுமில்லை.

நவநீதமென்னும் இந்திராபாயின் வேலைகளைக் கவனிப்பதற்கு ஒரு வேலைக்காரி நியமிக்கப்பட்டாள், இவ்வாறாகச் செல்வநாதர் தன் விருந்தாளிகளான அம்மூவரையும் மிக்க அன்புடனும் மரியாதையுடனும் நடத்த ஏற்பாடு செய்தார். உடனே கோகிலத்தின் வீட்டுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பி கோகிலமும் அவளது சகோதரனும் தாயாரும் வரவேண்டுமென்று கோரினர். அப்படியே அவர்களும் வந்ததால் எல்லாருமாக மாலை சாப்பாட்டுக்கு ஒன்றாக உட்கார்ந்தார்கள். கோகிலமும் சபாபதியும் சாப்பிடும்போதும் மற்ற வேலைகளிலும் ஒன்றாக இருந்தார்கள் என்பதையும், அவர்கள் காதலர்களைப்போல் தாராளமாகக் கலந்து உறவாடினார்களென்பதையும் சொல்ல வேண்டுவதில்லை. அப்படியே கோகிலத்தின் தாயாரும் மனத்திருப்தியும் சந்தோஷமும் அடைந்தாள். கோகிலத்தின் சகோதரனான சங்கரனோ அங்குள்ள எல்லா புதிய சாமான்களையும், சித்திரங்களையும் கண்டு களிப்படைந்தான். மறுநாள் காலை சபாபதி பெரியாராகிய செல்வநாதரின் கட்டளையின்படியே கோகிலம் இருக்கும் வீட்டுக்குச் சென்றான். சபாபதி சிறு பிராயம் முதல் சிறையில் அடைபட்டதால் அவன் தக்க பிராயத்தை அடைந்திருந்தானென்றாலும் அவனது மனம் மட்டும் குழந்தை உள்ளம்போல் கபடமற்றதாக இருந்தது. காதல் என்பதும் அவனுக்குத் தெரியவில்லை.

ஆகவே அவன் தனியாக இஷ்டப்படி கோகிலத்தைச் சந்தித்தால் நல்லதென்று அவர் நினைத்தார்..

மேலும் செல்வநாதர் சபாபதியைக் கோகிலத்தின் வீட்டுக்கு அனுப்பியதற்கு மற்றொரு முக்கியமான காரணமும் உண்டு. அதாவது சபாபதி இல்லாத காலத்தில் நவநீதம், மோகனசுந்தரம் ஆகிய இருவரிடமும் அவர் பலவிஷயங்களைச் சொல்ல விரும்பியதேயாகும். ஆகவே சபாபதி போய்விட்டதும் அவர், அவர்களிருவரையும் தனியறையில் அழைத்து எதிரில் உட்கார வைத்துக்கொண்டு, 'குழந்தைகளே! உங்களுக்கு நான் சில முக்கிய விஷயங்களைத் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. அதற்காகவே சபாபதியையும் கோகிலத்தின் வீட்டுக்கு அனுப்பிவிட்டேன். அவனுக்கு இந்த சங்கதிகள் தெரிந்தால் அவன் மனம் புண்படும். ஏனெனின் அவன் தாயார் ரங்கநாயகிச் சீமாட்டி கற்புநிலை தவறிய விஷயத்தை அவன் அறியலாகா தல்லவா? ஆனால் நாம் மூவரும் அதைப் பற்றி நிறைய சிந்திக்கவேண்டியதாக இருக்கிறது, நவநீதம்! நீ கண்டு பிடித்தபடியே ரங்கநாயகிச் சீமாட்டியே உங்கள் தாயார் என்பதில் சந்தேகமில்லை' என்று கூறியதும் நவநீதமும் மோகனசுந்தரமும் தாங்கள் நினைத்தது சரியாய் விட்டதே என்னும் சந்தோஷத்துடன் பரஸ்பரம் அளவளாவிக் கொண்டார்கள். செல்வநாதர் மட்டும் மனக்குழப்ப மடைந்தவராய்த் தன் ஆசனத்தைவிட்டு எழுந்து அவ்வறையிலேயே மேலும் கீழுமாகச் சிறிது நேரம் உலாத்தினர். பின்னர் அவர், 'குழந்தைகளே! நான் சொல்லப்போகும் பழைய விவரங்களைக் கவனமாகக்கேளுங்கள்.' என்று கூறிவிட்டுப் பழைய கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

—:(o):—

78-வது அத்தியாயம்.

ரங்கநாயகிச் சீமாட்டியின் சரிதை

செல்வநாதர், ரங்கநாயகிச் சீமாட்டியைப் பற்றிச் சொன்ன சரித்திரம் பின் வருமாறு:-சுமார் முப்பது வருஷங்களுக்குமுன் பச்சையப்பரின் சகோதரியான ரங்கநாயகியை சுகானந்தம் பிரபு மணம் செய்துகொண்டார். அப்பிரபு அன்னிய நாடுகளுக்குச் சென்று ராணுவத்தில் வேலை செய்ததால் தேகம் தளர்வுற்றதென்றாலும் நிறைய பணம் சம்பாதித்திருந்தார். விவாகத்தின்போது பிரபுவுக்கு வயது நாற்பது. ஆனால் ரங்கநாயகிக்கோ வயது பதினாறு அவள் தன்னைவிட இரண்டு மடங்குக்குமேல் அதிகமான வயதையுடைய ஒரு ஆடவனிடம் காதல்கொண்டு இன்பமாகக் காலங்கழிக்க முடியுமா என்பது சந்தேகம்தான். ரங்கநாயகி வேறு யாரையும் மோகிக்கவில்லை யென்றாலும் அவள் சுகானந்தம் பிரபுவை உண்மை உள்ளத்துடன் காதலிக்க முடியாது. உண்மையில் நிலைமையும் அப்படியிருக்கவில்லை. ரங்கநாயகி மிக்க ரூபசுந்தரி. அவள் மனோகரம் என்பவனை மனமாரக் காதலித்தாள். ஆயினும் மனோகரன் அக்காலத்தில் மிக்க ஏழையாய் இருந்தான். ஆகவே தான் காதலித்த மனோகரனை மணந்துகொள்ளமுடியாமல் ரங்கநாயகி வேண்டா வெறுப்புடன் சுகானந்தத்தை மணந்துகொள்ள நேரிட்டது. அவர்கள் இருவருக்கும் கலியாணமான இரண்டு வருஷத்துக்குப் பின்னர் அவர்களுக்கு சபாபதி என்னும் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை பிறந்த சில மாதங்களுக்குள்ளெல்

லாம் முன்பு சுகானந்தம் ராணுவத்தில் சேர்ந்து எந்த நாட்டுக்குப் போயிருந்தானே அதே நாட்டில் போர்மேகம் திரண்டதால் அவன் அன்னியநாட்டுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. தன் இளம் மனைவியையும், அப்போதுதான் பிறந்த குழந்தையையும் விட்டுப்பிரிய அவன் மனம் மிக்க வருத்தமடைந்ததென்றாலும் வேறு வழியில்லாமல் அவன் அன்னிய நாடு சென்றான்.

அதே சமயத்தில் மனோகரனின் மாமன் மக்கள் இருவரும் சந்ததி இல்லாமல் இறந்துபோனதால் அந்த மாமனுடைய சொத்தும், பிரபுப்பட்டமும் மனோகரனுக்குக் கிடைத்தவே சாதாரண ஏழையாக இருந்த மனோகரன் அப்போது மனோகரம் பிரபுவானதுடன் திரண்ட செல்வமும் கிடைத்தது. ரங்கநாயகி சுகானந்தம் பிரபுவை மணந்த பின்னர் அவளும் மனோகரமும் சந்தித்ததேயில்லை. ஆனால் சுகானந்தம்பிரபு அன்னிய நாட்டுக்குச் சென்ற பின்னர் அச்சிமாட்டி இரத்தினபுரி அரண்மனையில் ராணியாரின் மாளிகைக்கு அடிக்கடி வந்துபோக ஆரம்பித்தாள். அப்படி வந்து போகும் சமயத்தில் ஒருநாள் அவள் தன் பழைய காதலனும், புதிய பிரபுவுமான மனோகரத்தை அரண்மனையில் சந்தித்தாள். அவனுடன் பேசாமல் ஒருகாலடி எடுத்து வைக்கவும் அவளால் முடியவில்லை. ஒரு மறைவான இடத்தில் நின்று அவர்கள் இருவரும் நீண்டநேரம் பேசினார்கள். அந்தக் காதல் ஆழ்ந்ததாக இருந்ததால் சம்பாஷணையுடன் நின்றுவிட அவர்களால் முடியவில்லை. சுகானந்தம் பிரபுவோ நெடுந்தூரத்தில் இருக்கிறான். ரங்கநாயகியோ அவனை உண்மையில் நேசிக்கவில்லை. மனமாரத் தான் காதலித்த ஆடவனோ இப்போது பெரிய பணக்காரனாகவும், பிரபுப்பட்டத்துடனும் விளங்குகிறான். அவனுக்கு அப்போது கலியாணமில்லை. ரங்கநாயகியின் உரு

வமே அவன் மனக்கண்முன் தோன்றியதால் அவன் விவாகம் செய்து கொள்ளாமல் இருந்துவிட்டான். ஆகவே அவர்கள் இருவரின் சந்திப்பு பழுதுபட ஆரம்பித்தது. இருவரும் மனமார இன்பம் சுகிக்க ஆரம்பித்தார்கள். சொற்ப தினங்களில் ரங்கநாயகி கர்ப்பவதியாய்விட்டாள். அதை மறைத்துவைக்க முடியவில்லை. உடனே தன் அந்தரங்க தோழியும், விதவையுமாய் இருந்த ஒரு மாதினிடம் மட்டும் தன் இரகசியத்தைத் தெரிவித்துவிட்டாள். பிறகு அதை ரங்கநாயகி பிரசவித்த போது அவளைக் கவனித்த ஒரு டாக்டருக்குமட்டும் தெரிவிக்கப்பட்டது. உடனே இரத்தினபுரிக்கு அப்பால் மற்றோர் கோடியிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு சிறுவீட்டை வாடகைக்கு வாங்கி அதில் அக்குழந்தையையும், அர்மாதையும் விட்டுவிட்டார்கள். அப்போது பிறந்த அப் பெண்குழந்தைக்கு நவநீதம் என்னும் பெயர் இடப்பட்டது.

பின்னர் ரங்கநாயகிச் சீமாட்டி பயந்துவிட்டதால் இனி மனோகரம் பிரபுவைப் பார்க்கக்கூடாதென்றும், கூடுமாயின் அவனை இரத்தினபுரியினின்றும் வெளியே செல்லும்படி சொல்லிவிடுவதென்றும் தீர்மானித்து அதை மனோகரத்துக்குத் தெரிவித்தபோது அவனும் அதற்கு இணங்கி அன்னிய நாட்டுக்குச் சென்றான். அங்கே ஆறு வருஷங்கள் வரை இருந்த பின்னர் மீண்டும் இரத்தினபுரிக்கு அவசியமாக வரவேண்டியதாயிற்று. ஆறு வருஷங்கள் கடந்துவிட்டதால் தங்கள் காதல் தணிந்துபோய் இருக்குமென்றும், மீண்டும் ரங்கநாயகியைச் சந்தித்தாலும் சாதாரண சினேகிதர்களைப் போல் காணலாமென்றும் நினைத்து இரத்தினபுரிக்குவந்தான். அவன் வந்த சங்கதியை ரங்கநாயகிக்குத் தெரிவித்ததும் அவளும் வந்து சந்தித்தாளென்றாலும் அவர்கள் காதல் சம்பந்தமான பேச்சையே பேசவில்லை. தங்கள் காதலை எப்படியாவது

அடக்கிவிடுவதென்று தீர்மானித்தார்கள். ஆனால் உண்மைக் காதலை அடக்க யாரால் முடியும். பரஸ்பரம் சந்தித்தபோது ஒருமுறை காதல் உணர்ச்சி மீறிவிட்டதால் மீண்டும் தவறான வழியில் இறங்க வேண்டியதாயிற்று. தன்னை மணந்து கொண்ட சுகானந்தம்பிரபு நீண்டகாலமாக அன்னியநாட்டில் இருக்கிறான். அவன் எப்போது திரும்பி வருவான் என்பதே தெரியவில்லை. ஆதலால் அவள், தான் அடிக்கடி சந்திக்கக் கூடியவனும், தன் மனமார்ந்த காதலனுமான மனோகரத்தைக் கூடாமல் இருக்க முடியுமா? அவர்கள் இருவருக்கும் மீண்டும் சம்பந்தம் ஏற்பட்டதும் ரங்கநாயகி இரண்டாவது முறையாகக் கர்ப்பவதியானாள். அதையும் மறைத்து வைத்தார்கள். அதே தோழியும், டாக்டரும் சொல்லியனுப்பப்பட்டனர். நவநீதம் என்னும் அப்பெண்குழந்தை பிறந்த எட்டு வருஷத்துக்குப் பின்னர் இரண்டாவது முறையாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதையும் அந்தக் கிராமப்புறத்திலுள்ள வீட்டுக்கே எடுத்துச் சென்றார்கள். அந்தக் கிழவிதான் இரு குழந்தைகளையும் வளர்த்து வந்தாள்.

இவ்வாறு மறுபடியும் குழந்தை பிறந்ததும் மனோகரனும ரங்கநாயகியும் தாங்கள் இழைத்துவிட்ட குற்றத்துக்காக மனம் வருந்தினார்கள். இனி எதிர்காலத்திலேனும் குற்றமின்றி யோக்கியமாக வாழவேண்டுமென்று எண்ணினார்கள். ஆகவே மனோகரன் மறுபடியும் அயல்நாடு சென்றான். ஆனால் தனது மனமார்ந்த காதலியை விட்டுச் செல்ல மனம வரவில்லை என் செய்வது வேறு வழியில்லை. ஆகவே அவன் மன வெறுப்புடன் அன்னிய நாடு சென்று காலங்கழித்தான். அவனது பிரபுப் பட்டமும், திரண்ட செல்வமும் அவனுக்கு இன்பத்தை அளிக்கவில்லை. இவ்வாறு பதினெட்டு மாதம் காலங்கழித்த பின்னர் ஒருநாள் இரத்தினபுரி பத்திரிகையில்,

ராணுவத்தில் சேர்ந்து தூரதேசம் சென்ற சுகானந்தம் பிரபு இன்னும் ஆறு மாதங்களில் திரும்பி வருவார் என்று அதில் பிரசுரித்திருந்ததைக் கண்டான். அப்போது அவனுடைய மனதில் ஒருவித எண்ணம் தோன்றியது. அதாவது தனக்குப் பிறந்த அக்குழந்தைகளுக்கு வேண்டிய செல்வத்தை யளித்துவிட வேண்டும் என்பதே. மனோகரம் அம்மக்களைக் காண மிக ஆவலுடையவனாக இருந்தானென்றாலும் அவன் தந்தை என்று அம்மக்கள் அறிந்துகொண்டால் தாய் யார் என்பதையும் அறிய ஆவலுடையவர்களாக இருப்பார்களென்றும், ஜனங்களும் சும்மா இராமல் வம்புபேச ஆரம்பித்து ரங்கநாயகிக்கு அவமானம் வரும்படி செய்துவிட்டால் ஆபத்தாக முடியுமென்றும் நினைத்து அவன் அந்தக்குழந்தைகளைப் பார்க்காமலேயே இருந்தான். எனினும் கடைசியாக ஒருமுறை இரத்தினபுரிக்கு வந்து ரங்கநாயகிச் சீமாட்டியைப் பார்த்து அவளுக்குச் சிறிதும் கவலையில்லாதபடி அக்குழந்தைகளுக்கு அதிக ஆஸ்தியை சொத்தாக்கிவிட வேண்டுமென்று நினைத்து அதன்படியே இரத்தினபுரிக்கு வந்து தான் வந்திருக்கும் செய்தியையும், உத்தேசத்தையும் அறிவித்தான்.

ரங்கநாயகிச் சீமாட்டியும் இரத்தினபுரிக்கு அப்பால் இருபதுமைல் தூரத்திலுள்ள தன் இடத்திலிருந்து நகரத்துக்குச் சென்று மனோகரனைப் பார்த்ததில் அவன் அக்குழந்தைகளுக்காக லட்சம்பவுன் ஆஸ்தி எழுதி வைப்பதாகவும் ஒவ்வொருகுழந்தையும் ஐம்பதினாயிரம் பவுன் பெறலாமென்றும் கூறவும், அவள் மிகவும் சந்தோஷப் பட்டதுடன் அக்குழந்தைகளைப் பற்றிய கவலை இனி நீங்கிற்று என்றும் நிம்மதியுடன் இருந்தாள். ஆனால் அந்த சொத்துக்களை எந்தமுறையில் எழுதி வைப்பது? யார் யார் அதற்கு டிரஸ்டியாக

இருப்பது என்பவற்றையெல்லாம் அவனே யோசித்து ஒரு வித முடிவுக்கு வரலாமென்றும் கூறிவிட்டாள். ரங்கநாயகிச் சீமாட்டி வசித்து வந்த இடத்துக்கு அடிக்கடி சில நண்பர்கள் வரப்போக இருப்பதுண்டு. அப்படி வருபவர்கள் பச்சையப்பரும், அவனது மனைவியும், பஞ்சநதம் பிரபுவும் அவரது மனைவியும் ஆவர். மேலும் சுகாநந்தம் பிரபுவின் சகோதரன் தர்மலிங்கமும் அடிக்கடி வருவான். அவனுக்கு அப்போது கலியாணமில்லை. சுமாராகப் பணம் வைத்திருந்தான். அவன் அயோக்கியன் என்று பலரும் சொல்வார்கள். ரங்கநாயகிக்கும் அவனைக் கண்டால் பிடிக்காது. ஆயினும் மைத்துனனாக இருந்ததாலும், தன் கணவன் போகும்போது அக்டிடும்பத்தைக் கவனித்துக்கொள்ளும்படி அவனிடம் சொல்லியிருந்தாலும் அவன் வருவதைத் தடுக்க அவளால் முடியவில்லை. அவள் மனேகரனைச் சந்தித்துத் தன் குழந்தைகளுக்குச் சொத்து ஏற்பாடு செய்யும் விஷயமாய்ப் பேசிவிட்டு வந்த பின்னர் ஒருநாள் பஞ்சநதம் பிரபு, பச்சையப்பர், தர்மலிங்கம், அவள் ஆகிய அனைவரும் அவளது வீட்டில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது சுகானந்தம் பிரபு இரத்தினபுரிக்குத் திரும்பப்போகும் விஷயமும் பேசப்பட்டபோது, தன் கணவன் வருகிருனே என்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டதும் அவள் மூர்ச்சையானுள்.

அப்போது அவளது வாயினின்றும் சில சொற்கள் வெளியாயின. அருகிலிருந்த அம்மூவரும் இரகசியத்தை அறிந்துகொண்டு விட்டார்கள். சொற்ப நேரத்துக்குப் பின்னர் பச்சையப்பர் ரங்கநாயகிச் சீமாட்டியிடம் சென்று அவள் மயக்கமடைந்தபோது அவளது வாயினின்றும் வந்த சொற்களை வைத்துக்கொண்டு அவள் மைத்துனன் தர்மலிங்கம் அவளுடைய பிரத்தியேக மேஜையெல்லாம் தேடி அதி

லிருந்த கடிதங்களால் அவளுக்கும் மனோகரனுக்கும் சம்பந்த மிருப்பதைக் கண்டு கொண்டு விட்டதாக அறிவித்தான். அதன்மேல் அவள் தன் சகோதரனுடைய காலில் விழுந்து எப்படியாவது தன் மானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அதற்கு அவன் தானும் பஞ்சநதம் பிரபுவும் எவ்வளவோ பாடுபட்டதாகவும், தர்மலிங்கம் வழிக்கு வரவில்லையென்றும், மனோகரம் பிரபு வெளி தேசத்துக்கு ஓடிப்போய் இனி ரங்கநாயகிச் சீமாட்டியுடன் எத்தகைய கடிதப் போக்கு வரத்தும் வைத்துக்கொள்ளாமல் அவளை மறந்து வாழ்ந்தால் அதை மறைத்து வைப்பதாகவும் கூறிய தாக அறிவித்தான். ரங்கநாயகிச் சீமாட்டியும் அதற்குச் சம்மதித்து அவ்வாறே மனோகரம் பிரபுவுக்கு ஒரு கடிதம் எழுதுவதாக ஒப்புக்கொண்டாள். தர்மலிங்கமே அக்கடி தத்தை மனோகரனிடம் எடுத்துச் செல்வதாக ஒப்புக்கொண் டான்.

ரங்கநாயகிச் சீமாட்டி தன் காதலனான மனோகரம் பிரபுவுக்குக் கொடுத்த கடிதத்தை அவளுடைய மைத்துனன் தர்மலிங்கமே எடுத்துச் சென்றான். அவனைக் கண்ட மனோ கரம் அவன்மீது சிறிதும் ஆத்திரமோ கோபமோ அடையா மல் அக்கடிதத்தைப் படித்து அதன்படியே நடப்பதாக ஒப் புக்கொண்டான். எப்படியாவது ரங்கநாயகியின் கௌரவம் காப்பாற்றவேண்டு மென்பதே அவனுடைய அபிப்பிராய மாக இருந்தது. பிறகு மனோகரம் பிரபு தர்மலிங்கத்துட னேயே, அக்குழந்தைகள் பாதுகாப்பு சம்பந்தமாகவும் பேசி முடித்துவிட வேண்டுமென நினைத்துத்தான் லட்சம் பவுன் அவர்களுக்காகச் சொத்து ஏற்படுத்தப் போவதைப் பற்றித் தெரிவித்தான். அதற்குமேல் தர்மலிங்கமும் அப்படிச் செய் வதுதான் உசிதமென்று சொல்லிப் பணத்தை ஒரு பாங்கி

யில் போட்டு வைத்துவிட்டு அதை நிர்வகிப்பதற்கு இந்த இரகசியத்தை அறிந்தவர்களும் பிரபலஸ்தர்களாக இருப்பவர்களுமான பஞ்சநதம் பிரபு, பச்சையப்பர் ஆகிய இருவரையும் டிரஸ்டியாக நியமிப்பதென்றும், குழந்தைகள் உள்ள இடத்திலேயே அக்கிழவியினிடத்திலேயே வளர்வதென்றும், பெண்ணுக்குக் கலியாணமான பின்னர் ஐம்பதினுயிரம்பவுன் அவளுக்குச் சேரவேண்டுமென்றும், பையனுக்கு இருபத்தொரு வயதானதும் அவன் ஐம்பதினுயிரம் அடையவேண்டுமென்றும், மனோகரம் இனி ரங்கநாயகிச் சீமாட்டியுடன் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளாமல் தேசத்தையே விட்டுச் சென்று தலைமறைவாக இருக்கவேண்டுமென்றும் பேசி முடிவு செய்தார்கள்.

மறுநாள் அப்படியே பத்திரமும் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. பச்சையப்பரும் பஞ்சநதம் பிரபுவும் அந்த சொத்துக்கு டிரஸ்டிகளானுர்கள். ரங்கநாயகிச் சீமாட்டியும் மனநிம்மதியடைந்தாள். மனோகரமும் ஒப்பந்தத்தின்படி இனி கடிதம்கூட எழுதக் கூடாதென்னும் தீர்மானத்துடன் தேசம் விட்டு வெளியேறினுன். அவன் வெளிநாட்டுக்குச் சென்ற பிறகும் ரங்கநாயகிச் சீமாட்டியின் குடும்ப சம்பந்தமான விஷயங்களை இரத்தினபுரி நகரம் பத்திரிகையின் மூலம் அறிந்து வந்தான். அவன் பாஞ்சாலம் சென்ற தினங்களில் சுமார் பன்னிரண்டு வயதுள்ள சபாபதி என்னும் சுகானந்தம் பிரபுவின் பையன் இறந்துவிட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாயிற்று. அதன் பிறகு சொற்ப தினங்களுக்குள் சுகானந்தம் பிரபு இரத்தினபுரிக்குத் திரும்பியதாகவும் கணவனும் மனைவியும் திருப்தியுடன் வாழ்வதாகவும், பற்பல பொது விருந்துகள் முதலானவற்றிற்கு இருவரும் சேர்ந்து போவதாகவும் பத்திரிகைகளில் வெளியாவதைக்

186581

கண்டு மனோகரம் சந்தோஷப்பட்டான். ஆனால் ரங்கநாயகி யின் அதிர்ஷ்டமோ அல்லது துரதிர்ஷ்டமோ தெரியவில்லை. சுகானந்தம் பிரபு நாட்டுக்கு வந்த சில தினங்களில் இறந்து விட்டான். இறந்தபின் ஒரு வருஷமும் கழிந்தது. அப் போது மனோகரம் தான் மீண்டும் இரத்தினபுரிக்குச் சென் றால் ரங்கநாயகியைச் சரிப்படுத்த விதவா விவாகம் செய்து கொண்டுவிடலாம் என நினைத்துக் கடிதம் எழுதினான். இதற் குள் அவளுடைய மைத்துனன் தர்மலிங்கம் அவளை ஏமாற்றி சுகானந்தம் பிரபுவின் ஆஸ்தியையும் பட்டத்தையும் பறித்துக் கொண்டு தானே தர்மலிங்கம் பிரபுவாய்விட்டான் போலிருக் கிறது. மனோகரத்தின் கடிதத்துக்கு ரங்கநாயகிச் சீமாட்டி பதில் எழுதுகையில் தன் கணவன் இறந்துபோன ஒரு சம்ப வமே தனக்கு ஒருவிதமான புத்துணர்ச்சியை அளித்திருப் பதாகவும், தான் முன்பு தன் கணவனுக்குத் துரோகம் செய்துவிட்டதற்கு இப்போது மனமார வருந்துவதாகவும், இனிதான் பரிசுத்தமாக வாழ்க்கையை நடத்திப் பிராயச் சித்தம் செய்துகொள்வதென்று தீர்மானித்திருப்பதாகவும், ஆதலால் இனி மனோகரம் தன்னை மறந்துவிட வேண்டு மென்று வணக்கத்துடன் கேட்டுக் கொள்வதாகவும் எழுதி விட்டாள்.

அவள் அவ்வாறு எழுதிவிட்டதற்கு அவளுடைய மைத்துனனும், அவளை மேய்க்கிறவனுமான தர்மலிங்கத்தின் தூண்டுதலாக இருக்குமோ என்று முதலில் நினைத்து மனோ கரம் மற்றொரு கடிதம் ரங்கநாயகிச் சீமாட்டிக்கு எழுதித் தன் அபிப்பிராயத்தை வற்புறுத்தினான். அப்போதும் அவள் தான் சுயபுத்தியைக்கொண்டே எழுதுவதாகவும், தர்மலிங் கத்தின் தூண்டுதல் எதுவுமில்லையென்றும், உண்மையில் தன் மனம், தான் செய்துவிட்ட குற்றத்துக்காக அதிகம் வருந்து

கிறதென்றும், இனி அத்தகைய கூட்டுறவை வைத்துக் கொள்ள முடியாதென்றும், பரிசுத்த வாழ்க்கையை மேற் கொள்ளப் போவதாகவும் கண்டிப்பாக அறிவித்துவிட்டாள். அதனால் மனவெறுப்பு அடைந்த மனோகரம் பிரபு அத்தேச த்தைவிட்டு இன்னும் தூரத்திலுள்ள மற்றொரு தேசத்துக் குச் சென்று பரோபகார விஷயங்களிலேயே புத்தியைச் செலுத்தி வாலானன். பல வருஷங்கள் கழிந்துவிட்டதாலும், கவலையினால் அவன் தேகம் வாடிவிட்டதாலும் அவன் அடை யாளத்தை யாரும் கண்டுபிடிக்க முடியாமற் போயிற்று. மனோகரம் பிரபுவின் சகோதரன் புத்திரனை சந்திரசேகரம் பிரபு சரியான வழியில் இல்லையென்றும், அவனுடைய சிற் றன்னையான மதனவல்லிச் சீமாட்டியும், அவனைச் சரியான படி கண்டிக்கவில்லை யென்றும் தெரிந்ததாலும், தான் தன் மக்களுக்காக வைத்துச் சென்ற பணமும், மக்களும் என்ன ஆனார்கள் என்று அறிய ஆவல் தோன்றியதாலும், அவன் அங்கிருந்து புறப்பட்டு சுமார் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னர் இங்கே வந்தான். ஆனால் பற்பல இரகசியங்களை யும் கண்டுபிடிக்கவேண்டியிருந்ததால் அவன் வேறு மாற்றுப் பெயரையே வைத்துக்கொண்டு ஒவ்வொன்றாக ஆராய ஆரம் பித்தான். இதற்குமேல் என்னால் சொல்ல முடியவில்லை. என் உணர்ச்சி என் மார்பை அடைக்கிறது.

என்று இவ்வாறு முழு விவரத்தையும் செல்வநாதர் கூறி முடித்ததும் தன் இரு கரங்களாலும் மோகன சுந்தரத்தையும், அவனது சகோதரியான நவநீதத்தையும் தழுவிக்கொண்டு கண்ணீர் வடித்தவண்ணம், 'எனதன்புள்ள மக்களே' நான் தான் உங்கள் தகப்பனார். 'மனோகரம் பிரபு நான்தான்' என் றார். நேயர்காள்! நவநீதம் என்னும் இந்திராபாய் தன் சொந்த பிரயத்தனத்தால் தன் தாய் யார் என்பதைக் கண்டு பிடித்து

விட்டிருந்தாள். ஆனால் தந்தை தான் யார் என்பது தெரியாமல் இருந்தது. எனினும் தன் தாயார் கற்பு நிலையினின்றும் தவறி இருக்க வேண்டுமென்றும், சபாபதியின் தகப்பனாரே தன் தகப்பனாராக இருக்க முடியாதென்றும் சந்தேகித்தாள். மிக்க அறிவும் ஆற்றலுமுள்ள அப் பெண்ணின் சந்தேகம் சரியாய்ப் போய்விட்டது. தந்தை இன்னார் என்பது அவளுக்குத் தெரிந்ததுடன் தந்தை எதிரிலேயே நிற்பதையும் கண்டு அவளும் அவளுடைய சகோதரனும் அளவிலா ஆனந்தமடைந்தார்கள். இவ்விடம் மற்றொரு விஷயமும் கவனிக்க வேண்டியது அவசியமாகும். அதாவது பாவம் ரங்கநாயகிச் சீமாட்டி, ஏதோ குற்றம் இழைத்து விட்டாளென்றும் அதற்கான பொறுப்பு முழுதும் அவளுடையதல்ல வென்பதை எடுத்துக் காண்பிக்க வேண்டியது அவசியமாகிறது. பதினாறு வயதுள்ள பெண்ணாகிய அவளை, அவளது தந்தைபோன்ற வயதான நாற்பதுபிராயமுள்ள சுகானந்தத்துக்குக் கொடுத்து விவாகம் செய்து வைத்தது நியாயமா? இரண்டாவது அவள் மனோகரனை மனமாரக் காதலிக்கிறாள் என்பதை அறிந்திருந்தும் பணத்துக்காக அவனை விட்டு மற்றொருவனுக்கு அதுவும் அவளால் விரும்பப்படாதவனுக்கு அவளை மனைவியாக்கலாமா? ஆகவே குற்றம் சமூகத்தின் கட்டுப்பாட்டினுடையதே யொழிய அவளுடைய தாகாது. போதாக்குறைக்கு அந்த இளம் வயதில் அவளுடைய கணவன் வருஷக் கணக்காக அன்னிய நாடுகளில் வசிக்கவும், அவளுடைய காதலன் மிக்க செல்வத்துடன் சமீபத்தில் வசித்ததுடன் அடிக்கடி சந்திக்கவும் நேரிட்டு விட்டது. ஆகவே சமய சந்தர்ப்பங்களால் ரங்கநாயகி வழி தவறிச்செல்ல நேரிட்டதே யொழிய இயற்கையில் அவள் அயோக்கியமான ஒழுக்கங்கெட்ட மாது என்று கூற முடியாது. அவ்வாறு அவள் ஒழுக்கங் கெட்டவளாக இருப்பின் கணவன் இறந்தபின் மனோகரனை மணந்து

கொண்டு இன்பத்தில் மூழ்கலா மல்லவா ? கணவன் இறந்த தும் அவளுடைய இயற்கையான நற்குணம் தூண்டவும் அவள் உணர்ச்சிபெற்று பரிசுத்த வாழ்க்கையை மேற்கொண்டாள். ஆதலின் இப்படிப்பட்ட தவறுன சமய சந்தர்ப்பங்கள் பெண்களுக்கு ஏற்படாதபடி சமூகம் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

79-வது அத்தியாயம்

——:():——

மனோகரம்-தர்மலிங்கம் சந்திப்பு.

செல்வநாதர் தானே மனோகரம்பிரபு என்று சொல்லிக்கொண்டே அம் மக்களைத் தழுவிக் கொண்டதும் சுமார் அரைமணிநேரம் வரை மூவரும் பேசாமல் ஒருவரையொருவர் ஆனந்தத்தால் தழுவிக் கொண்டார்கள். சந்தோஷத்தின் மிகுதியால் அவர்களால் பேச முடியவில்லை. அரைமணி நேரம் கழித்த பின்னர், மனோகரம் பிரபு மீண்டும் பேச ஆரம்பித்து, 'அன்புள்ள மக்களே ! சபாபதி திரும்பி வந்து விடுவான். தற்சமயம் அவனுக்கு நாம் உண்மையைச் சொல்லிவிடக் கூடாது. நான் செல்வநாதர் என்று தான் இன்னும் சொற்பகாலம் அவன் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். என்னையும் நீங்கள் இன்னும் சிறிதுகாலம் தந்தை என்று மனத்தாலும் நினைக்கக்கூடாது. ரங்கநாயகிச் சீமாட்டியையே நேரில் பார்த்துப் பேசும் வரையில் நான் செல்வநாதராகவே இருக்க வேண்டும்' என்று சொன்னார். அம் மக்கள் இருவரும் அவர் சொன்னபடியே நடந்துகொள்வதாக வாக்குறுதி அளித்தார்கள். அவர் மேலும் அவர்களுடைய

விஷயத்தைக் கூற ஆரம்பித்து, 'உங்களுடைய சொத்துக்கு டிரஸ்டியாக இருக்க பஞ்சநதம் பிரபுவும், பச்சையப்பரும் ஆதி முதலே துரோகம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். தர்மலிங்கமும் தன் சகோதரன்சொத்தைப் பறித்துக்கொண்டு அவனுடைய பையனுகிய சபாபதியையும் சிறையி லடைத்து விட்டதனுல் அவர்கள் இருவரும் உங்கள் சொத்தைக் கொள்ளையடிக்க இடங்கொடுத்து விட்டான். இந்த மூன்றுபேரும் சேர்ந்தே இப்படி செய்து விட்டார்கள் என்பதில் சந்தேக மில்லை. நவநீதம்! உனக்குக் கலியாணமானதாகச் சாக்குகள் சொல்லி துளசிங்கம்பிரபுவுடன் உன்னை ஒரு நிமிஷம் சேர்த்து வைத்து உன் பணத்தைப் பச்சையப்பர் கொள்ளையடித்திருக் கிருன். அதுபோலவே மோகனசுந்தரம் சிறுபிராயத்திலேயே இறந்து விட்டதாகப் பொய் புகார் கிளப்பிவிட்டு அதையும் கொள்ளை யடித்திருக்கிருன். அதை பச்சையப்பரும், பஞ்ச நதம் பிரபுவும் பங்கிட்டுக்கொண்டு விட்டார்கள் போலத் தோன்றுகிறது. மோகனத்தை ஹேமவதி சீமாட்டியிடம் வேலைக்கு வைத்து அவனுக்கு ஜீவனத்தை ஏற்படுத்திக் கொ டுத்ததுடன் உனக்கும் வருஷம் நானூறு பவுன்கொடுக்க ஏற் பாடு செய்தார்கள் போலிருக்கிறது, இருக்கட்டும். அவர்கள் இருவரும் உங்கள் தாயாரின் இரகசியத்தை அறிவார்க ளாத லால் அவர்களுடன் சண்டைபோட முடியாது. பணத்துக் காகப் பார்த்தால் அவர்கள் ரங்கநாயகிச்சீமாட்டியின் மானக் கேட்டை வெளிப்படுத்தி விடுவார்கள். ஆதலால் அதை நினைப்பதில் பிரயோசனமில்லை' என்று சொன்னதும் மனே கரம் பிரபு சிறிது நேரம் மேற்கொண்டு பேச முடியாமல் ஏதோ சிந்தித்தார்.

பின்னர் மறுபடியும், அவர் அம்மக்களிடம், 'குழந்தை களே! இவ்விஷயத்தை நேற்றே சொல்லிவிடாமல் போன

தற்கு மன்னியுங்கள். நேற்று சந்தர்ப்பம் சரிப்படவில்லை. இன்று எல்லா விஷயங்களும் உங்களுக்குத் தெரிந்துவிட்டது. உங்களுடைய தந்தையாகிய நான் உங்கள் அன்புமிக்க தாயாரின் கற்பு கெடுவதற்குக் காரணமாய் இருந்ததற்காக என்னைக் கண்டு நீங்கள் வெட்கமோ, அருவருப்போ அடையமாட்டீர்கள் என்று நம்புகிறேன்' என்று வினயத்துடன் கூறினர். அதற்கு அம்மக்கள் இருவரும் எத்தகைய பதிலும் கூற வில்லை ஆயினும் அவர்களுடைய மிதமிஞ்சிய அன்பின் காரணமாகத் தங்கள் தந்தையின் ஆலிங்கனத்தில் சாய்ந்தனர். அப்போது அவர், 'ஆ, என்ன அளவுகடந்த இன்பத்தை நான் அனுபவிக்கின்றேன். சில தினங்களுக்கு முன், யாரேனும் இவ்வாறு நடைபெறுமென்று என்னிடம் ஜோசியங் கூறியிருந்தால் அதை நான் நம்பியிருக்கவே மாட்டேன். என் மக்கள் உயிருடன் இருந்து நான் சந்திப்பேனு என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஆயினும் என் இயற்கையே மாறி விட்டதால் அம்மக்களைக் கண்டாலும் இவ்வளவு இன்ப உணர்ச்சியைப் பெறுவேனு என்பது சந்தேகமாகவே இருந்தது. ஆனல் இன்று நான் ஒரு வாலிபன் அப்போது தான் தனக்குப் பிறந்த குழந்தையைக் கண்டு இன்புறுவது போலன்றே ஆனந்தமடைகின்றேன்' என்று கூறியதும் அதற்குமேலொன்றும் பேச முடியாமல் மௌனம் சாதித்தார். மூவரும் சிறிது நேரம் பேசாமல் ஒருவரையொருவர் பார்த்து ஆனந்தக் கண்ணீர் சொரிவதில் காலங்கழித்தனர்.

சொற்ப நேரத்துக்குப் பின்னர், மனோகாம் பிரபு பின்னும் பேசத்தொடங்கிக் கூறியதாவது:—'நவநீதம்! உன் புத்தி சாலித்தனத்தை நான் போற்றுகிறேன். சபாபதியே சுகானந்தம் பிரபுவின் சொத்துகளைப் பெறுவதற்கு உரிமையுடையவன் என்பதைத் தக்க ஆதாரங்களுடன் அறிந்த பின்னரும்

ரங்கநாயகிச் சீமாட்டியின் கற்புநிலை சந்தேகத்தில் இருப்பதால் இதைப் பகிரங்கப் படுத்தாமல் சமாதான முறையிலேயே வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்று நீ செய்த முடிவு அதிகம் பாராட்டத்தக்கதே. இப்போது அவ்வேலையை நான் உன்னிடத்திலிருந்து ஏற்றுக்கொண்டு முடிக்க வேண்டியதாக இருக்கிறது. நான் சமுத்திரவிலாச மாளிகைசென்று தர்மலிங்கம் பிரபுவைக் காண்கிறேன்' என்று தெரிவித்தார். இச்சம்பாஷணை முடிந்து அரைமணி நேரத்துக்குப் பின்னர் மனோகரம் சமுத்திரவிலாச மாளிகைக்குச் சென்றார். அங்கு சென்றதும் முன்னர் இந்திராபாய்க்குச் சினேகமாகி அவளிடமிருந்து சன்மானமும் பெற்ற சேவகனைப்பிடித்து அவன் மூலம் தர்மலிங்கம்பிரபு தேக அசௌக்யத்துடன் படுத்திருந்த அறைக்குப் போய்ச் சேர்ந்தார். தர்மலிங்கம் பிரபுவோ வெளுத்த முகத்துடன் வெறும் எலும்பும் தோலுமாய் அதிக கவலையும் துக்கமும் உடையவன் போல் பலஹீனத்துடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தான். செல்வநாதரைக் கண்டதும் தர்மலிங்கம், 'ஐயோ, இது யார்! நீ எங்கே வந்தாய், என்னையும் கேட்காமல் உள்ளே வந்துவிட்டாயே' என்றான். அப்போது செல்வநாதர் எதிரிலிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து, 'தர்மலிங்கம்! பீதியடையாதே. நிதானமாக இரு. உன்னுடன் பல முக்கிய விஷயங்களைப் பற்றிப் பேசவே நான் இங்கு வந்திருக்கிறேன்' என்றார்.

அதற்கு அவன், 'நீர் யார் என்பதைத் தெரிவி' என்று கூறிக்கொண்டே அவரை உற்றுப் பார்த்தான். அவர், 'அப்பா! என் பெயர் செல்வநாதர். இந்தப் பெயர் உனக்குப் புதிதாகத் தோன்றுகிறதோ?' என்று கேட்கவும், 'ஆம், இந்தப் பெயரையே நான் கேட்டதில்லை. நான் தேக

அசௌக்கியத்துடன் இருப்பதால் நீ வீண் காலதாமதம் செய்யாமல் வந்த வேலையைப் பற்றிப் பேசு' என்ருன். அப்போது செல்வநாதர், 'இந்தப்பெயர் உனக்குப் புதிதாக இருக்கிறதா ? நான் நேற்றுக்கு முன்னாள் பஞ்சநதம் பிரபுவையும், பச்சையப்பரையும் சந்தித்துப் பேசினேனே அது உனக்கு எட்டவில்லையா ?' என்ருர். அதைக் கேட்டதும் தர்மலிங்கம் இன்னும் அதிக பீதியை அடைந்தான். அவர் எதற்காக வந்திருக்கிருர் என்பதை அறியும் உத்தேசத்துடன் அவரது முகத்தை உற்றுப் பார்த்தான்; சுமார் பதினுறு வருஷங்களுக்கு முன் பார்த்த அந்த மனேகரம் பிரபுவே அவர் என்பதை அறிய முடியவில்லை. அவரது தோற்றத்தில் அவ்வளவு மாறுதல் ஏற்பட்டு விட்டிருந்தது. அப்போது மனேகரம் பிரபுவாகிய அந்த செல்வநாதர், 'அப்பா, உங்கள் சமாசாரத்தைச் சொல்கிறேன் கேள். நீயும், பஞ்சநதம் பிரபுவும், பச்சையப்பரும் குற்றவாளிகளே. சபாபதி தான் சுகானந்தம் பிரபுவின் சொத்துக்கு உரிமை யுடையவனுக இருக்கும்போது நீ அதைப் பறித்துக்கொண்டு விட்டாயே' என்ருர். அப்போது தர்மலிங்கம் அதிக ஆத்திரத்துடன் 'இல்லவே இல்லை. நீ சொல்வது யாரோ தவருன பேர்வழி. சபாபதி எப்பொழுதோ இறந்து விட்டான். அவனுடைய பிரேதம் புதைக்கப்பட்டுப் பல வருஷங்களாய்விட்டன' என்ருன். அதற்கு அவர், 'என்னிடமும் பொய்பேசத் துணியவேண்டாம். என்னிடம் எல்லா ஆதாரங்களும் இருக்கின்றன. இந்த விவகாரத்தைப் பகிரங்கப் படுத்தாமல் சமாதானம் செய்து விடவே நான் இங்கு வந்திருக்கிறேன். நீ குற்றத்தை உணர்ந்து பரிகாரம் தேட முயற்சிக்கிருயா ? அல்லது சட்டப்படி தண்டனைக் குட்படத் தயாராக இருக்கிருயா?' என்று கண்டிப்பான முறையில் கேட்டார்.

அதற்குத் தர்மலிங்கம் மீண்டும், 'நீ யார்' என்று வற்புறுத்திக் கேட்க அவர், 'ஐயா, பழைய சமாசாரங்களை யெல்லாம் தெரிந்துகொண்டு உன் குற்றத்தை வெளிப்படுத்தும் சக்தியுடையவன். ஆனல் நாஞக எதையும் பகிரங்கப்படுத்தப் போவதில்லை. நீ சமாதானத்துக்கு வராவிட்டால் நான் வேறு விதியில்லாமல் கோர்ட்டுக்கு உன்னை இழுக்க நேரிடும். அப்போது எல்லாம் வெளிச்சமாகிவிடும். மேலும் அநியாயமாக சபாபதி இறந்து விட்டான் என்று சொல்லவேண்டாம். அவன் இந்தச் சிறையிலிருந்து மெதுவாகத் தப்பித்துச் சென்றது உனக்குத் தெரியாதா ? அவனுக்கு இப்போது நல்ல சிநேகிதர்கள் ஏற்பட்டிருக்கிருர்கள்' என்ருர். அப்போது தர்மலிங்கம் தன் நிலைமையை உணர்ந்து நிதானமாக, 'ஓ, எல்லாம் எனக்குத் தெரிந்து விட்டது. அந்தப் பைத்தியக்காரப் பையல் தானே சபாபதி என்னும் எண்ணத்தைப் பெற்றிருக்கலாம். அவனுக்குத் துணை புரிந்து லாபமடைய அவனுடன் பலர்சேர்ந்து கொண்டிருக்கலாம். நீயே அவனுக்கு வக்கீலாகவும் அமர்ந்து இந்த விவகாரத்தை நடத்த முன் வந்திருக்கலாம். ஆதலால் நீ என்ன சொல்லப் போகிருய் என்பதைத் தெரிவி. நான் பொறுக்க முடியாத வியாதியுடன் இருப்பதால் இப்போது கோர்ட்டுக்கு இழுக்கப்படத் தயாராக இல்லை' என்ருன். அப்போது அவர், 'இந்த நோய் உனக்கு உன்னுடைய தீய மனச்சாட்சி காரணமாக உண்டானது தானே. நான் ஒரு வக்கீலுமல்ல, அல்லது நீ சொல்கிறபடி லாபமடையும் சுயநல எண்ணத்துடன் இந்த விவகாரத்தில் இறங்கியவனுமல்ல. நான் பச்சையப்பர், பஞ்சநதம் பிரபு ஆகிய இரு அயோக்கியர்களின் பெயரையும் இப்போது பிரஸ்தாபித்தேனல்லவா? அவர்களும் உன் சம்மதத்தின்மீதும் உன்னுடன் கலந்து சதிசெய்துமே திரளானபணத்தைக் கொள்ளையடித்து விட்டார்கள் என்பதையும் நான் அறிவேன்' என்ருர்.

அதற்கு அவன் உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை நடுங்க பீதியுடன், 'அந்த ஒப்பந்தப் பத்திரத்தில் என் பெயருமில்லை. அந்த சொத்துக்களுக்கு நான் டிரஸ்டியுமல்ல அப்படியிருக்கும்போது அந்த இருவரும் செய்த குற்றத்துக்கு நான் எப்படிப் பொறுப்பாளி ஆவேன். அதிருக்கட்டும்; நீ யார்? அந்தசொத்தை வைத்துவிட்டுப் போனவரின் ஏஜெண்டாகவோ அல்லது பந்துவாகவோ நீ இருக்க வேண்டும்' என்றதற்கு அவர், 'ஆம்; நான் மனோகரம் பிரபுவின் சிநேகிதன்,' என்றார். அதற்குத் தர்மலிங்கம், 'அந்த மனோகரம் மகா அயோக்கியன். அவன் என் சகோதரியைக் கெடுத்துவிட்டான். நான் போனால் போகிறதென்று கருதி அவளையும், அவனையும் மன்னித்து விட்டேன். அவர்களுடைய இரகசியத்தை நான் ஐயோ பாவமென்று கருதி மறைத்து வைத்தேன்.' என்றதும் செல்வநாதர், 'ஓ, தர்மலிங்கம்! நீ உன் சுயநலத்தை உத்தேசித்தே அவ்வாறு நடந்து கொண்டாய்! என்றார். அதற்கு அவன் மிக ஆத்திரத்துடன், 'நான் தர்மலிங்கம் பிரபு அல்லவா? என் உரிமையைப் பறிக்க யாரால் முடியும். நீ என்னை தர்மலிங்கம் என்று கூறலாமா?' என்று கேட்டான். அதற்கு அவர், 'அந்தக் கதையை யெல்லாம் என்னிடம் பேசவேண்டாம். நீ செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டு சபாபதியின் உரிமையை அவனுக்கு அளிக்க முன் வரவேண்டும். இனியும் நீ உலகத்தை ஏமாற்ற முடியாது. அதை ருஜுப்பிப்பதற்கு வேண்டிய ஆதாரங்களெல்லாம் எங்களிடம் இருக்கின்றன. யாரோ ஒரு அநாதைப் பிரேதத்தை சபாபதியின் பிரேதமென்று சொல்லிப் புதைத்ததும் பிறகு அவனைச் சமீபகாலம் வரை சிறையில் அடைத்திருந்ததும் தெரிந்துவிட்டது' என்று கூறினர்.

அதைக் கேட்ட தர்மலிங்கம் இன்னது செய்வதென்று

தெரியாமல் அதிக துக்கத்துடன் நாற்காலியில் சாய்ந்தான். அவனுடைய நா வரண்டுவிட்டது, ஆகவே அங்கிருந்த பான த்தை எடுத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டே, 'ஐயா, நான் உன் இஷ்டப்படி நடக்கிறேன். இப்போது உன் தய வில் சிக்கிக்கொண்டேன்!' என்றான். செல்வநாதரும் எதிரில் மேஜைமீதிருந்த ஒரு பாட்டிலை எடுத்துக் கொடுத்தார். அதை தர்மலிங்கம் அருந்தியதும் சிறிது பலம் தோன்றவே, 'ஐயா, உனக்கு எல்லா விஷயங்களும் தெரிந்திருக்கிறது. யாரோ துரோகிகள் என் பழைய இரகசியங்களை வெளியிட்டுவிட் டிருக்கிறார்கள். நீ என்னிடமிருந்து எதிர்பார்ப்பதென்ன?' என்று கேட்டான். அதற்குச் செல்வநாதர், 'அச்சங்கதிகள் எனக்கு எப்படித் தெரிந்திருந்தால் என்ன? நீ உடனே குற் றத்துக்குப் பரிகாரம் தேடவேண்டும். சபாபதியே, உன் அண்ணன் குமாரனென்றும் அவனே சொத்துக்கும் பட்டத் துக்கும் உரியவனென்றும் அவன் இறந்துபோனதாக வெளி யான செய்தி பொய்யானதென்றும் எழுதி அதில் உன் கையெழுத்துப் போட்டுத் தரவேண்டும்' என்றார். அதற்குத் தர்மலிங்கம், 'ஐயா, நான் அவ்வாறு எழுதிக் கொடுத்து விட் டால் என்னைச் சும்மா விடுவார்களா? கடுமையான தண்ட னைக்கு நான் ஆளாக நேரிடுமே' என்றான். அப்போது அப் பெரியார், 'உனக்கு அந்தத் தண்டனை வேண்டியதுதான். ஆனால் நாங்கள் உன்னை மன்னித்து அக்குற்றத்தை வெளி யிடுவதில்லையென்று தீர்மானித்திருக்கிறோம். சபாபதியின் உரிமையை ஒப்புக்கொண்டு ஒரு தஸ்தாவேஜ் எழுதி அதில் நீ கையெழுத்திட வேண்டும். பிறகு நீ இங்கிருந்தால் எப்படி யேனும் கஷ்டம் நேரிடுமாதலால் உன் வாழ்நாளை அன்னிய நாடு சென்று காலங் கழிப்பதே நல்லது. சபாபதியைப் பிரபு

வாக்கச் சில சடங்குகள் செய்யவேண்டியிருக்கும்,' அப்போது நீ இங்கு இருக்கலாகாது. பிரபுக்கள் சபையினரும் உன்னைத் தேடிக் கண்டுபிடித்து தண்டிக்கும்படியான சிரமம் எடுத்துக் கொள்ள மாட்டார்கள். ஆதலால் நீ கவலையில்லாமல் அங்குக் காலங் கழிக்கலாம்,' என்றார்.

அதற்குத் தர்மலிங்கம், 'அப்படியானல் அந்த தஸ்தாவேஜை யார், எப்போது எழுதுவது?' என்று கேட்க, செல்வநாதர், 'நான் இப்போதே எழுதித்தருகிறேன். நீ கையெழுத்துப் போடு. அதற்கு வேண்டிய சாட்சியைப் பின்னல் அவசியமாகும்போது தேடிக்கொள்கிறேன். அது என் வேலை. எழுதும் ஆயுதங்கள் எங்கே இருக்கின்றன?' என்று கேட்டார். தங்மலிங்கமும் எதிரிலிருந்த சாய்வு மேஜையைக் காண்பித்தான். செல்வநாதர் அங்கே சென்று அம்மேஜையைத் திறந்து அதிலுள்ள இங்கிபுட்டி, பேனு, காகிதம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தார். அவர் அதை எழுதி முடிக்கச் சுமார் பதினைந்து நிமிஷங்களாயிற்று. அந்தக்காலத்தில் பாவம், தர்மலிங்கத்தின் மனம் படாத பாடுபட்டு அவனது நெஞ்சம் புண்ணாயிற்று. அந்த தஸ்தாவேஜை செல்வநாதர் எழுதி முடித்ததும் அதை தர்மலிங்கத்தினிடம் படித்துக் காண்பித்து அதில் கையெழுத்து இடும்படி கேட்டார். அதைத் தர்மலிங்கம் கையிலெடுத்துக்கொண்டு, 'செல்வநாதரே! தயவுசெய்து என்மீது கிருபை செய். நான் பிழைத்திருக்கும் வரையிலாவது எனது கௌரவப் பட்டம் எனக்கே இருக்கக்கூடாதா? நான் இன்னும் அதிக காலம் இவ்வுலகில் இருக்கப் போவதில்லை. எனது மரணகாலம் சமீபித்துவிட்டது. நீ யார் என்பது எனக்குத் தெரியாவிட்டாலும் யாரோ அதிக நெருக்கமுள்ளவன் என்பதுமட்டும் தெரிகிறது. சபா

பதியின் உயிரை நான் கொல்லாமல் விட்டுவிட வில்லையா?' என்று கேட்டுக்கொண்டான்.

அதற்கு மனோகரம் பிரபு, 'தர்மலிங்கம், உன்னுடைய துர்க்குணத்தை யெல்லாம் நான் நன்றாக அறிவேன். கொல்லாமல் விட்டுவிட்டது உன் நற்குணத்தினாலோ அல்லது பச்சாதாபத்தாலோ அல்ல என்பது நிச்சயம். அவனுடைய ஆஸ்தி பாஸ்திகளையும், பட்டத்தையும் அடித்துக் கொண்டதுடன் அவனது தாயினின்றும் அவனைப் பிரித்து பைத்தியக்காரனைப்போல் சிறையில் அடைத்துவைக்கத் துணிந்த நீ அவனைக் கொன்றிருக்க மாட்டாயா? உனக்கு அந்த எண்ணமும் இருந்தது. ஆனால் தைரியமில்லை. இதனாலேயே இதில் கடவுளுடைய செயலும் கலந்திருக்கிறதென்பது நன்கு தெரிகிறது. கடவுள்தான் இதில் குறுக்கிட்டு உனக்குக் கொலை செய்யக்கூடிய தைரியம் பிறவாதபடி செய்து விட்டார். ஆதலால் இதில் உனக்கு ஒன்றும் பெருமையில்லை. இனியும் வீண் காலதாமதம் செய்யாமல் இதில் கையெழுத்து போடு' என்றார். வேறு விதியில்லாமல் தர்மலிங்கம் அந்த தஸ்தாவேஜில் கையொப்பமிட்டான். பிறகு மனோகரம் பிரபு அதைத் தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்ட பின்னர் தர்மலிங்கத்தைப் பார்த்து, 'ஐயா, உனக்கு நான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவேன். நீ வேறு தேசம் சென்று சேர்ந்த பின்னரே இந்த தஸ்தாவேஜைப் பயன்படுத்திக்கொள்வேன். நீ உடனே புறப்பட்டுவிட வேண்டுமென்பதில்லை அதற்காக வீண் காலதாமதம் செய்துகொண்டிருந்தாலும் பொறுக்க முடியாது. உன் தேகநிலை சிறிது சுமாரானதும் நீ புறப்பட வேண்டியதுதான். சபாபதி எல்லா ஆஸ்திபாஸ்திகளையும் அடைந்து விட்டாலும் நீ பிழைத்திருக்கும் வரையில் உன் ஜீவனத்தைக் கௌரவமாகக் கழிப்பதற்கு வேண்டிய

தொகை கொடுக்கப்படும். நீ பிறருக்குக் காண்பிக்காத தயையும் அனுதாபமும் உனக்குக் காண்பிக்கப்படும் என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார். அவர் வண்டியில் ஏறும் சமயத்தில் முன்பு இந்திராபாய்க்கு சபாபதியின் இரகசியத்தை யெல்லாம் சொன்ன தர்மலிங்கத்தின் வேலைக்காரன் செல்வநாதர் என்னும் அப்பிரபுவைப் பார்த்து, 'ஐயா, என் எஜமானன் நான் அவரைப் பற்றிய விஷயத்தைச் சொல்லிவிட்டேன் என்பதை அறிந்துகொண்டு விட்டாரா?' என்று கேட்க, அவர், 'ஒன்றும் தெரிந்து கொள்ளவில்லையென்றாலும் உன்மீது சந்தேகப்படலாம். எதற்கும் நீ இந்த வேலையை விட்டுவிடுவதே நல்லது. இந்தக் கடிதத்தை வைத்துக்கொள். பதினைந்து தினங்களுக்குப் பின் என்னை வந்து பார்; உனக்கு ஏதேனும் வழி செய்கிறேன்' என்று கூறினர். வேலைக்காரன் வந்தனம் செலுத்தியதும் அவரும் புறப்பட்டுச் சென்ருர்.

அவர் தம் வீடுபோய்ச் சேர்ந்ததும் சபாபதியும் மோகனசுந்தரமும் நவநீதமும் அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். அவரும் தர்மலிங்கத்தின் வீட்டில் நடந்ததை யெல்லாம் விவரமாகத் தெரிவித்தார். தான் எழுதி தர்மலிங்கத்தால் கையொப்பமிடப்பட்ட தஸ்தாவேஜையும் அவர்களுக்குக் காண்பித்தார். பிறகு அவர் மறுநாள் தான் புதுக்கோட்டைக்குச் சென்று ரங்கநாயகிச் சீமாட்டியைத் தேடிப் பார்த்துப் பேசிவிட்டு வருவதாகச் சபாபதியிடம் தெரிவித்தார். அப்போது மனோகரம் பிரபு, 'சபாபதி! சில முக்கிய காரணங்களைக் கொண்டு இப்போது நீ என்னுடன் வரக்கூடாது. இந்தக் காரியங்களை யெல்லாம் என் இஷ்டப்படி கவனிக்கவிட்டுவிடவேண்டும். எனினும் கூடிய விரைவில் நீ உன் தாயாரைக் கண்டு அவளது மடியில் உட்காரும்படி செய்வேன். சீமாட்

டியே என்னுடன் இரத்தினபுரிக்கு வரலாம், அல்லது உன்னையே அவ்விடத்துக்கு அழைத்துவர ஒரு ஆளை அனுப்புவேன். ஆதலால் எல்லாவற்றையும் என்பொறுப்பில் விட்டுவிட உனக்குச் சம்மதம்தானே' என்று கேட்டார். அதற்குச் சபாபதி அதிக ஆர்வத்துடன் அப்பெரியாரது கையைப் பிடித்து அழுத்தி, 'என தன்புள்ள நண்பரே! பெருமை தங்கிய ஐயாவே! உங்கள் இஷ்டப்படி விடாமல் நான் வேறு என்ன செய்வேன்? என் விஷயத்தில் இவ்வளவு அக்கரையுள்ள தாங்கள் இஷ்டப்படி நடப்பதில் எனக்கு என்ன தடை இருக்கப்போகிறது?, என்று கூறினான்.

அன்று மாலை மனோகாம் பிரபுவாகிய செல்வநாதர் விட்டு ஆட்களையெல்லாம் அழைத்துத் தாம் ஊரில் இல்லாத போது நவநீதத்தையே எஜமானியாகக் கொண்டு எல்லாரும் அவளது கட்டளையின்படி நடக்க வேண்டுமென்று தெரிவித்தார். பிறகு மோகனதாஸுக்கு ஒரு கடிதம் எழுதி சில அவசர வேலையாகத் தாம் வெளியூருக்குச் செல்லவேண்டியிருப்பதாகவும், விரைவில் வந்துவிடுவதாகவும் தெரிவித்தார் மறுநாள் காலை எல்லாருடைய அனுமதியும் பெற்று புதுக்கோட்டைக்குப் புறப்பட்டார்.

80-வது அத்தியாயம்

:(o):

ஆச்சர்யமான கடிதம்

மனோகாம் பிரபு தமது காதலி ரங்கநாயகிச் சீமாட்டியைக் காணும் பொருட்டு புதுக்கோட்டைக்குப் புறப்பட்டநாளில் மாலை நவநீதமென்னும் இந்திராபாயும்,

அவளது சகோதரனை மோகனசுந்தரமும் சபாபதியை அழைத்துக்கொண்டு வெளியே சுற்றிவிட்டு வருவதற்காகப் புறப்பட்டார்கள். வழியில் கோகிலத்தின் வீடு வந்ததால் சபாபதியை அங்கே கோகிலத்துடன் பேசிக்கொண்டிருக்கும் படியும் தாங்கள் இன்னும் சிறிது தூரம் சென்று திரும்பும் போது அவனையும் அழைத்துச் செல்வதாகவும் சொல்லிவிட்டு நவநீதமும் மோகனசுந்தரமும் இன்னும் சிறிது தூரம் நடந்தார்கள். நவநீதம் மிக்க அழகிய ஆபரணங்களை அணிந்து கொண்டிருந்தாள். தக்க பருவத்தையடைந்து பார்ப்போர் மனதைக் கவரும் தன்மையில் விளங்கினுள். அவளது சகோதரன மோகனசுந்தரமும் ஹேமவதி சீமாட்டியின் மாளிகையை விட்டு வந்தபின்னர் ஒருவாறு தேக அசௌக்கியமடைந்தானென்ருலும் பின்னுல் அவன் சுகமாகவும் சௌக்யமாகவும் இருந்தான். அவனும் ஏழையைப் போலவோ, வேலைக்காரனைப்போலவோ இல்லாமல் ஒரு பெரிய பிரபுவின் வீட்டுப் பிள்ளைபோல் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தான். சகோதரனும் சகோதரியுமான அவர்கள் நல்ல நிலைமையை அடைந்து பிறரால் கவனிக்கும்படியான அந்தஸ்தையடைந்ததற்காகச் சந்தோஷமடைந்தனர். ஆகவே அவர்கள் இருவரும் தனியாக நடந்துகொண் டிருந்தபோது நவநீதம் தன் சகோதரனிடம், 'சகோதர! ஆ, என்ன ஆச்சர்யம்? நாம் பட்டபாடு என்ன? இப்போது அடைந்திருக்கும் அந்தஸ்து என்ன? எல்லாம் கனவுபோல்தானே தோன்றுகிறது' என்று கேட்டாள்.

அதற்கு மோகனசுந்தரம், 'உண்மைதான். இப்போது நாம் காண்பதெல்லாம் உண்மைதானு அல்லது ஏதேனும் மயக்கமோ என்று கூட நான் இன்று காலையிலும் படுக்கையிலிருந்து எழுந்தபோது நினைத்தேன். சென்ற சில வாரங்க

ளுக்குள் நமது வாழ்க்கையில் ஆச்சர்யமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதுபோலவே சபாபதியின் நிலைமை யிலும் அதிக மாறுதல் ஏற்பட்டு வருகிறதல்லவா ?' என்று கூறினான். அப்போது நவநீதம், 'அவனும் மிக்க சந்தோஷ மாகவே இருக்கிறான். அதிலும் அவன் அந்த நற்குணமும் அழகும் நிரம்பிய கோகிலத்தைக்காணும்போது அளவுகடந்த இன்பத்தை யடைவதுடன் அவளை உண்மையிலேயே அவன் காதலிக்கிறான். ஆ! என்ன சகோதரா! காதல் என்னும் சொல்லைக் கேட்டதும் உன் முகம் வாடுகிறது. ஓ, நீ ஏதோ காதல் ரகசியம் வைத்துக்கொண் டிருக்கிறாய். அதை நீ என் னிடம் சொல்லவே யில்லையே' என்று கூறிக்கொண்டே நடந்து கொண்டிருந்தவள் திடீரென்று நின்ற இடத்திலேயே நின்று அவனது முகத்தை உற்று நோக்கினாள். அப்போது மோகன சுந்தரம், 'அக்கா, என்னை மன்னிக்க வேண்டும். நான் என்னுடைய இரகசியத்தை இதுவரை உன்னிடம் சொல்லாததற்காக என்னை மன்னிக்க வேண்டுமென்று கேட் டுக் கொள்கிறேன்,' என்றதும் அவள், 'தம்பி! அப்படி யொன்றுமில்லை. உன் இரகசியத்தை என்னிடம் சொல்லும் படி வற்புறுத்தவில்லை. அதை என்னிடம் தெரிவிக்கலாமென உனக்கும் தோன்றி நீ தெரிவித்தால் அவ்விஷயத்தில் நான் என் அனுதாபத்தைக் காண்பிப்பதுடன் சரியான யோசனை யும் சொல்வேன்' என்றாள்.

மோகனசுந்தரம் வெட்கத்துடன் தலை குனிந்தவனாய், 'நான் நினைப்பது உண்மையான அன்புதானா என்று தெரிய வில்லை. ஆயினும் என் மனம் அவ்விஷயத்தை மறக்கமாட் டேன் என்கிறது. ஒருபுறம் நான் தவறுசெய்து விட்டேனோ என்று அச்சமும் அடைகிறேன்' என்றதும் நவநீதம் மிக ஆர்வத்துடன், 'தம்பி, நீ நேசிப்பது யாரை?' என்று கேட்க

மோகனம், 'ராஜேஸ்வரி' என்றான். அதைக்கேட்ட அவனது சகோதரி, 'ஹேமவதி சீமாட்டியின் மூத்த குமாரியான ராஜேஸ்வரிதானே. நீ உண்மையில் அவளை நேசிப்பதாயின் அவளை மணந்துகொள்ள முயற்சிப்பதில் எத்தகைய தவறுதலும் இல்லை. இதற்காக நீ வெட்கப்படுவானேன்? நமது தந்தை திரும்பி வந்ததும் எல்லா விவரத்தையும் நீ அவரிடம் சொல்லு. அவர் அதற்குத் தக்க ஏற்பாடு செய்வார். ஆனால் ராஜேஸ்வரி உன்னை நேசிக்கவில்லை என்றால் என்ன செய்வது என்பதைத் தான் இப்போது நாம் ஆலோசிக்க வேண்டும்' என்றாள். அப்போது மோகனசுந்தரம் தன் சகோதரியினிடம் ஒளி மறைவின்றித் தனக்கும் ராஜேஸ்வரிக்கு மிடையில் நடந்த எல்லா விஷயங்களையும், ஒருநாள் அவர்கள் இருவரும் ஒரு அறையில் இருந்ததை ஹேமவதி சீமாட்டியே பார்த்து விட்டது உள்பட, யாவற்றையும் விவரமாகத் தெரிவித்துவிட்டான். அதை யெல்லாம் நவநீதம் மௌனமாக அதிகம் கவனித்தாள். அவன் பேசி முடிந்த பின்னரும் அவள் அதைப் பற்றிச் சிறிது நேரம் சிந்தித்தாள்.

பிறகு அவள், 'தம்பி, ராஜேஸ்வரி உன் விஷயத்தில் அதிக அன்புடன் நடந்துகொண்டதோடு உன் பிறவி சம்பந்தமாக ஏதேனும் மர்ம மிருக்க வேண்டுமென்றும், நீ அப்போது இருந்த நிலைமை உண்மையானதல்லவென்றும் அவள் கூறியதிலிருந்து அவளுக்கு உன்னிடம் உண்மையான அன்பு இருந்திருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது. ஆனால் ஒரு சந்தேகமும் தோன்றுகிறது. அவளுக்கு உன்னிடம் உண்மையான அன்பு இருக்குமாயின் தனியே சென்றேனும் உன்னை மணந்துகொள்ள ஏற்பாடு செய்திருக்க மாட்டாளா, எப்படியோ சொல்ல முடியாது. அவளிடம் நான் நெருங்கிப் பழகியதில்லை யாதலால் அவளைப்பற்றி ஒன்றும் முடிவாகச்

சொல்லிவிடமுடியாது. எனினும் ராஜேஸ்வரி மிக்க அழகானவள் அல்லவா?' என்றாள். உடனே அவனும் காமவிகாரங் கொண்டவன்போல், 'ஆம்; அளவுகடந்த ரூபலாவண்யமே' என்று பரிவுடன் பேசினான். அப்போது நவநீதம், 'தம்பி, காதல் அல்லது உண்மை அன்பு என்பது என்ன என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் மோகம் என்பது இப்படித் தான் இருக்கும் என்னும் அறிவுமட்டும் எனக்கு இருக்கிறது. உன் மனதையே ஆராய்ந்து சொல். ராஜேஸ்வரியின் உருவம் சதா உன் மனக்கண் முன் தோன்றுகிறதல்லவா? ஆம். எனக்குத் தெரியும். நீ அடிக்கடி அவளைப்பற்றிச் சிந்திப்பதுண்டு. அவளை விட்டுப் பிரிந்ததால் உன்மனம் அதிகம் புண்பட்டதென்பதையும் இப்போது நான் அறிகிறேன். உன் மனம் அவள்மீதே பதிந்து கிடக்கிறதல்லவா?' என்று வினவினாள். அதற்கு மோகனம், 'ஆம், என் மனம் அவளிடமே பதிந்திருக்கிறது. நான் அவளை உண்மையில் நேசிப்பதாகவே நம்புகிறேன். ஆயினும் அக்கா! அந்த ஆணவங்கொண்ட ஹேமவதி சீமாட்டி தன் மகளை ஒருகாலத்தில் தன் மாளிகையில் சேவகனாக இருந்த ஒருவனுக்குக் கொடுத்து விவாகம் செய்துவைக்க இசைவாளா?' என்று ஆவலுடன் விசாரித்தான்.

அப்போது நவநீதம், 'தம்பி மனோகரம்பிரபு உனக்குப் பெருஞ் செல்வத்தைக் கொடுப்பார். அப்போது ஹேமவதி சீமாட்டியின் தப்பு அபிப்பிராயங்களெல்லாம் தானாக விலகிவிடும். அவர் உனக்கு நல்ல கௌரவத்தைக் கொடுக்க முடியாதென்றாலும் நிறைய செல்வத்தைக் கொடுக்க முடியும். இத்தேசத்தில், 'குலம் குப்பையிலே பணம்பந்தியிலே' என்கிறபடி செல்வமிருந்தால் அந்தஸ்து தானாகவே கிடைத்துவிடும். அது மட்டுமா, ராஜேஸ்வரி தன் தாய்க்குக் கட்டுப்பட்டு

நடப்பவள் என்று தெரியவில்லை. அன்றியும்? அன்று நமது தந்தை என்னுடன் தனியாகப் பேசிக்கொண்டிருந்த போது ஹேமவதி சீமாட்டியின் வாழ்க்கையும் அவ்வளவு உத்தமமானதல்ல என்று தெரியப்படுத்தினர். சந்திரசேகரம் பிரபு அச்சீமாட்டியின் கள்ளக் காதலனாக இருப்பதாகவும், அவளுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டுதான் அவன் சில தவருன செயல்களைச் செய்திருப்பதாகவும் அவர் கூறுகிருர். எதற்கும் நமது தந்தை வருகிறவரையில் காத்திருப்போம். அவர் நம்முடைய இன்பத்தை பெருக்கும் விஷயத்தில் சகல விதமான சிரத்தையும் எடுத்துக்கொள்வார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. மேலும் ராஜேஸ்வரிக்கும் உனக்குமிடையே உண்மையான காதல் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்குமாயின் அதை அணைக்க யாராலும் முடியாதென்பதும் எப்படியாவது காதல் விஷயத்தில் நீங்கள் வெற்றியடைவீர்கள் என்பதும் நிச்சயம்' என்ருள். அதற்கு அவன், 'எனதன்புள்ள சகோதரியே! இவ்வளவு தேறுதல் கூறியதற்காக உனக்கு வந்தனம் செலுத்துகிறேன். என் இரகசியத்தை உன்னிடம் தெரிவித்துக் கொண்டு விட்டதற்காக என்ன சந்தோஷப்படுகிறேன் தெரியுமா? இதை முன்னரே உன்னிடம் தெரிவிக்க வேண்டுமென்று எவ்வளவோ பிரயத்தனப்பட்டேன். ஆனல் துணிச்சல் வரவில்லை. அதிருக்கட்டும் அக்கா! உனக்கு எப்போதுமே இப்படிப்பட்ட காதல் என்பது எவரிடத்திலும் தோன்றியதில்லையா?' என்று கேள்வி கேட்டான்.

நவநீதம் அதற்குப் பதில் அளிக்கையில், 'இல்லவே இல்லை; என்னுடையதைப்போன்ற உறுதியான மனேபலம் யாருக்கும் இருக்காது. எனக்கு ஏற்பட்ட சமய சந்தர்ப்பங்களால் என் மனம் அவ்வாறு தேர்ச்சி பெற்றுவிட்

டது. காதல் என்பதோ அல்லது ஒரு ஆடவனை மோகிப்ப தென்பதோ எனக்குத் தெரியவில்லை. அத்தகைய உணர்ச்சி யெனக்குத் தோன்றவில்லை' என்றாள். அதற்கு மோகன சுந் தரம், 'சகோதரியே! நான் துளசிங்கம் பிரபுவைப் பலமுறை பார்த்திருக்கிறேன். அவன் மிக்க அழகானவனும் அறிவும் ஆற்றலுமுள்ளவனைப் போலவும் இருக்கிறான். அவனுடன் நீ மனைவியாகச் சொற்பநாள் வாழ்ந்திருந்தால் அவனை நேசிக்க வேண்டுமென்னும் எண்ணம் உனக்கு உண்டாயிராதா;, என் றான். அப்போது அவள், 'அப்படி நான் நினைக்கவில்லை. ஒருத்தி எவனைக் காதலிக்க வேண்டுமென்று கடவுள் ஏற்பா டாயிருக்கிறதோ அவனைக் காணும்போதே அவளுக்கு அவனிடம் ஒருவிதமான அன்பும் நேசமும் தானாகவே ஏற் படும். அப்படிப்பட்ட உணர்ச்சி எனக்கு எப்போதுமே துள சிங்கத்தினிடம் ஏற்படவில்லை' என்று சமாதானம் கூறி னாள். அதற்கு அவன், 'ஏற்படவில்லை யென்றால் அதற்குக் காரணம் வேறு. உனக்கும் அவனுக்கும் பேருக்கு மாத்திரம் கலியாணம் நடந்ததேயொழிய இருவரும் வாழப்போவதில்லை யென்று தெரிந்ததால் உனக்கு அவனிடம் நேசம் ஏற்பட வில்லை. அவனை நீ நல்ல நிலைமையிலேயே சந்தித்துச் சொற்ப காலம் அவனுடன் பழகியிருந்தால் அப்போது நிலைமை வேறு விதமாகத்தான் இருந்திருக்கும். சரி, அதிருக்கட்டும். கொள் ளைக் கூட்டத் தலைவனாகிய நளினரஞ்சனபாபு என்பவனிடம் நீ நெருங்கிப் பழகினாயே, அவன் நீ பார்த்த ஆடவர்களுக்குள் எல்லாம் மிக்க அழகானவன் என்றும் சொன்னாயே; அவனிட மும் உனக்குக் காதலோ மோகமோ ஏற்படவில்லையா?' என்று கேட்டான்.

அதற்கு அவள், 'சகோதரா! நானும் உன்னைப்போல் யாரையேனும் நேசித்ததாகச் சொல்லவேண்டு மென்பதில் நீ

அதிக ஆவலுடையவனுக இருக்கிறுய் என்பது நன்கு தெரிகிறது. அது சகஜமே. யாரேனும் ஒருவர் காதலில் அடிபட்டால் அவ்வாறே அடிபட்ட பிறருடன் பேசுவதில் தான் அவருக்குச் சந்தோஷம் ஏற்படுவது வழக்கம். இதனுல் உனக்கு ராஜேஸ்வரியிடம் உண்மையிலேயே அதிக ஆவல் இருக்கிறதென்பது புலனுகிறது. என் விஷயமோ நளின ரஞ்சன் விஷயத்திலும் பழைய கதையே. அவனுடன் சிலகாலம் நான் நெருங்கிப் பழகினேன் என்பது உண்மையே. அவனும் என்னிடம் அதிக நேசத்துடனும் பரிவுடனும் நடந்துகொண்டதுடன் என்னுடன் இன்பம் அனுபவிக்கவும் அவனுல் இயன்றவரை முயற்சித்தான். அவன் அக்கொள்ளைக்கூட்டத்தலைவனுக இருந்ததால் நிரம்ப செல்வமுடையவனுகவும் இருந்தான். அவனது அழகைப்பற்றிக் கேட்கவேண்டியதே இல்லை. இவ்வளவு இருந்தும் எனக்கு மட்டும் அவனிடம் அன்போ, காதலோ ஏற்படவே இல்லை. அவனை நான் ஒரு சாதாரண சினேகனுகத்தான் கொண்டேன். ஆகவே என் மனத்தில் காதலைத் தோற்றுவிக்கக் கூடியவன் அவனல்ல என்றே நான் நினைக்கிறேன்' என்ருள். அதற்கு மோகனம், 'அப்படியானுல், அக்கா, நீ யாரையும் மணந்து கொள்ளப் போவதில்லையா?' என்று கேட்டான். அப்போது அப்பெண்மணியும், 'நான் உண்மையிலேயே யாரையேனும் மனப்பூர்வமாகக் காதலிக்கிறவரையில் எவரையும் கலியாணம் செய்துகொள்ள மாட்டேன். சகோதரா! இது என்ன இப்படி பேசிக்கொண்டே நாம் அதிக தூரம்வரை வந்துவிட்டோம்' என்று கூறிக்கொண்டே தட்டென்று நின்ருள்.

அப்போது கழுத்தில் ஒருகவரைக் கட்டிக்கொண்டிருந்த அழகிய புரு ஒன்று நமது நவநீதத்தின் மடியில் வந்து விழுந்தது. அதைக் கண்டதும் அவள் சந்தோஷத்துடன், 'ஆ,

இது என்னால் அன்புடன் வளர்க்கப்பட்ட புறாக்களில் ஒன்று அல்லவா?' என்று கூறிக்கொண்டே அதை ஆர்வத்துடன் தடவிக் கொடுத்தாள். அப்போது அதன் கழுத்தில் ஒரு கடிதம் இருப்பதைக் கண்டாள். அதைக் கையில் எடுத்துக்கொண்டாளே யொழிய பிரிக்க மனம் வரவில்லை. ஏன்? இனி கமலவதியுடன் இப்படிப்பட்ட கடிதப் போக்குவரத்து எதையும் வைத்துக்கொள்ளக் கூடாதென்று தந்தை மனோகரம் பிரபு கண்டிப்பான கட்டளை இட்டிருக்கிறார் அல்லவா? அப்படியே செய்வதாக நவநீதமென்னும் அந்த இந்திராபாயும் கண்டிப்பான வாக்குறுதி அளித்திருக்கிறாளே. இப்போது அதை மீறி அக் கடிதத்தை எடுத்து வாசிக்கலாமா? என்னும் சந்தேகம். அவளுக்கு உண்டாய் விட்டது. அப்போது மோகனசுந்தரம், 'அக்கா! நீயாக அந்தக் கமலவதிக்குக் கடிதம் எழுதவில்லை. அவள் ஏதோ அவசர காரணமாகவே இதை எழுதி விட்டிருப்பாள். ஆகவே அதைப் படித்துப் பார்ப்பதில் தோஷமென்ன இருக்கிறது? அவசியமிருந்தாலொழிய நீ பதில் எழுதவேண்டியதில்லை. ஆகையால் அதைப் படித்துப் பார்க்கலாம்' என்றான். அப்போது அவள், 'அப்படியானால் இதைப் படிக்கலா மல்லவா?' என்று கூறிக் கொண்டே கடிதத்தைப் பிரிக்கப் போகிறாள். அச் சமயத்தில் அப் புறாவும் தன் வேலை முடிந்ததென்று அறிந்து கொண்டது போல் உயரத்தில் பறக்க ஆரம்பித்தது. அச்சமயம் அவள், 'பார்த்தாயா? உயரிய அறிவுள்ள பறவையை. அது முதலில் முன்பு நாம் வசித்த மாளிகைக்குச் சென்றிருக்கும். அங்கு நான் காணாமற்போகவே அது என்னைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறது' என்று சொல்லி அக் கடிதத்தைப் பிரித்தாள். அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—'அன்புள்ள சினேகிதையே! எதிர் காலத்தில் நீ உயரிய அந்தஸ்தோடு

வாழக்கூடிய நிலைமை ஏற்பட்டது கண்டு நான் மிக்க சந்தோஷமடைகிறேன். இக் கடிதம் உனக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ நான் அறியேன். எப்படியாவது ஆகட்டுமென்றே துணிந்து இதை அனுப்பியிருக்கிறேன். உன் சம்பந்தமான ஒரு முக்கிய விஷயத்தை உனக்குத் தெரிவிக்காமலிருக்க முடியவில்லை. நேற்று ஒரு குறிப்பிட்ட மனிதர் இங்கு வந்து எங்கள் வீட்டில் தங்கினர். அவரது பெயரை உன் மூலம் நான் அறிந்திருந்ததால் அவரை அணுகி நான் பேசியதில் அவர் உன்னைத் தேடிக்கொண்டே இந்த தேசத்துக்கு வந்திருப்பதாகச் சொன்னர். இக் கடிதம் வேறு யாருக்கேனும் சேர்ந்து விட்டால் என்ன செய்வதென்னும் அச்சத்தால் அப்பெயரை நான் இங்கு எழுதவில்லை யென்ருலும் நீ அதைத் தெரிந்து கொண்டிருப்பாய் என்றே நான் நம்புகிறேன்.

அக்கடிதத்தை மோகனமும் தன் சகோதரியுடனேயே படித்ததால், 'அவள் யாரைப்பற்றி எழுதியிருக்கிருள்' என்று கேட்டான். அதற்கு நவநீதம் மிக்க யோசனையுடன், 'என்னுலும் தெரிந்துகொள்ள முடியவில்லை. எவ்வளவு யோசித்தாலும் யாராக இருக்கலாமென்று குறிப்பாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அதிருக்கட்டும். இதற்குப்பதில் எழுத வேண்டிய அவசியமில்லாமற் போய்விட்டது. கமலவதியின் குடும்பத்தாரிடமிருந்து நான் பெற்ற உதவிக்கு என் ஆயுள் முழுதும் அவர்களை மறக்கமுடியாதென்ருலும் நமது தந்தையின் கட்டளைக் கிணங்க அவர்களுடன் கடிதப் போக்குவரத்தை நிறுத்திவிட வேண்டியதுதான். தம்பி! அதிகநேரமாகிவிட்டது. கோகிலத்தின் வீட்டுக்குச் சென்று சபா

பதியை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போகலாம் வா?" என்றாள். அப்படியே அவர்கள் இருவரும் கோகிலத்தின் வீட்டுக்குச் சென்றதில், கோகிலமும் சபாபதியும் தோட்டத்தில் உலாவச் சென்றிருந்ததால் சிறிது நேரம் அங்கேயே காத்திருந்தார்கள். சொற்ப நேரத்துக்குள் சபாபதி தன் காதலியான கோகிலத்துடன் வீட்டுக்குள் நுழைந்ததும் அவனை அழைத்துக்கொண்டு மோகனமும் நவநீதமும் செல்வநாதரின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தனர். அன்று மாலை ஏழு மணிக்கு நவநீதம் மட்டும் அம்மாளிகையை அடுத்த மைதானத்தில் தனியாக ஏதோ சிந்தித்துக்கொண்டே உலாவிக் கொண்டிருந்தாள். மோகனசுந்தரமும் சபாபதியும் மாளிகையிலேயே தங்கியிருந்தனர். அவள் தனியே உலாவியபோது தன் சகோதரன் ராஜேஸ்வரியைக் காதலிப்பது பற்றியும், தனக்கு அக் கமலவதியிடமிருந்து கிடைத்த ஆச்சர்யமான கடிதத்தைப் பற்றியும் சிந்தித்துக்கொண்டே ஒரு பர்லாங்கு தூரம் நடந்துவிட்டாள். அங்கே அந்த மைதானம் முடிந்து எதிரில் பெரியதொரு ரமணீயகரமான ரஸ்தா வருகிறது. அங்கே போனபோது அவள் பிரமை கொண்டு திடீரென்று திடுக்கிட்டு நின்றாள். ஏன்? யாரோ ஒருவர் மிக்க சந்தோஷத்துடன், 'ஆ! அவள்தான்' என்று கூறியது அவள் காதில் விழுந்ததுதான். ஆகவே, அவள் தன் சிந்தனையினின்றும் விழிப்படைந்து தலையைத் தூக்கிப் பார்த்தாள். கமலவதியின் கடிதம் கிடைத்தபோது அங்கு வந்த அம் மனிதன் யாராக இருக்கலாம் என்று ஏற்பட்ட சந்தேகம் அப்போது பரிகாரமாய் விட்டது. கொள்ளைக்கூட்டத் தலைவனாக இருந்த நளினரஞ்சன் பாபு தன் எதிரில் நிற்பதைக் கண்டாள். அவனுக்கு அப்போது வயது முப்பத்தைந்து இருக்கும். அதிக உழைப்பு

காரணமாக அவன் முகத்தில் சிறிது களைப்பு காணப்பட்டது. ஆனால் அவனை நமது நவநீதம் முதல்முறை சந்தித்தபோது அவனுடைய முகம் எவ்வளவு அழகாக இருந்ததோ அதே நிலைமையில் இப்போதும் இருந்தது. அவன் மீசை வைத்துக் கொண்டிருந்தான். அது தவிர முகத்தை நன்றாக க்ஷவரம் செய்துகொண்டிருந்தான். அவன் கண்களும் முன்போலவே பிரகாசமாய் இருந்தன. அவன் நவநீதத்தை உற்றுப்பார்த்து ஆனந்த மடைந்தான். அவன் பெரிய மனிதனைப்போல அழகிய உடைகளை ரம்மியமாக அணிந்திருந்தான்.

நவநீதம் அவனைக் கண்டதும் அவன் தன்னைச் சிறைப் படுத்தியிருந்தான் என்பதை மறந்து அவன் அவளை நடத்திய இனிய விதத்தை மட்டும் நினைத்துத் தாராள எண்ணத்துடன் அவனை அன்புடன் பார்த்து வரவேற்றாள். ஆயினும் அவன் எதிர்பாராத வகையில் திடீரென்று தன் எதிரில் வந்து நிற்பதற்காக அவனை மெதுவாகக் கண்டித்தாள். பிறகு அவள் அவனைப் பார்த்து, 'நளின ரஞ்சன், நீ இங்கு என்ன வேலையாக வந்தாய்?' என்று கேட்டாள். அவன் அவளது கையைப் பிடித்து அதைத் தன் வாயின் அருகில் வைத்து முத்தமிட்டு, 'உன்னுடைய உருவமே என்னை இவ்வளவு தூரம் இழுத்துக்கொண்டு வந்துவிட்டது. நீ என் கூட்டத்தை விட்டு ஓடி வந்தது முதல் உன் உருவம் என் மனக் கண்ணை விட்டு அகலவே இல்லை. நீ என்னைக்கேட்டதுபோல நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல் பார்க்கலாம். நீ என்னைப்பற்றி எப்போதாவது நினைத்ததுண்டா?' என்று கேட்டான். அதற்கு அவள், 'ஆம், நினைத்ததுண்டு. ஆனால் சிநேகித முறையில்தான் நான் உன்னை நினைத்தேன். என்னுடைய சரித்திரத்தைச் சமீபத்தில் சொல்லிக்கொண்ட போதும் சிநேகிதன் என்று

தான் குறிப்பிட்டேன்' என்றாள். அதைக் கேட்டதும் அவன், 'சிநேகிதமா' இருக்கட்டும். சிநேகிதமே இன்னும் சிறிது பழக்கத்தின்மீது அன்பாக மாறலாமல்லவா? உனக்குக் கலியாணமாகவில்லையென்பதையும், நீ வேறு யாரையும் காதலிக்கவில்லையென்பதையும் நான் நன்கு அறிவேன். ஒரு பெண்மணியாகிய உனக்கு, அதிலும் தக்க பிராயமும் நல்ல அழகும் வாய்ந்த உனக்குக் காதல் உணர்ச்சி ஏற்படாமலா இருக்கும். உன்னை நேசித்து உன்னுடைய காதலை நான் பெறவேண்டுமென்பதே கடவுளின் ஏற்பாடு என்று தான் நான் நம்புகிறேன்' என்று தன் காதலைத் தெரிவிக்க ஆரம்பித்தான்.

அப்போது நவநீதம் மிக்க கண்டிப்பான முறையில் ஆனால் அன்பு குறையாத வகையில், 'நளினரஞ்சன்! உன்னிடம் எனக்குச் சிநேகத்தைத் தவிர வேறு எவ்விதமான எண்ணமும் உண்டாவதில்லை. ஆதலால் நீ தயவு செய்து உன்னுடைய பெருந்தன்மைக்கேற்ப என்னை விட்டு உடனே விலகிச் செல்வதே நலம். அதோ தெரிகிற அந்த மாளிகையில்தான் நான் வசிக்கிறேன். அதில் எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்து என் விஷயத்தில் அதிக சிரத்தை கொண்டுள்ள கனவான் வசிக்கிறார். அவர் என்னை வேறுவிதமாக நினைப்பதற்கு இடம் தரலாகாது. அவர் இப்போது ஊரில் இல்லையென்றாலும் என் தம்பி அங்கே இருக்கிறான். மேலும் பல சேவகர்களும் நண்பர்களும் இருக்கிறார்கள். நான் ஒரு அன்னியனுடன் பேசுவதை அவர்களில் யாரேனும் பார்த்தால் என்ன நினைப்பார்கள்? ஆதலால் நீ இங்கு நிற்கும் வொவ்வொரு நிமிஷமும் எனக்கு அச்சத்தையே தருகிறது' என்றாள். அதற்கு நளினரஞ்சன், 'நீ இப்போது கூறிய புதிய ஆட்களுக்கெல்லாம் நான் அன்னியனாக இருக்

கலாம். ஆனால் நான் உனக்கு அன்னியனல்லவே. நீ என்னை விட்டுப் பிரிந்த இந்த நான்கு வருஷங்களுக்குள் நான் செய்த தென்ன? நினைத்தது என்ன? இப்போதும் நான் நம்பியிருப்ப தென்ன என்னும் விஷயங்களை யெல்லாம் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். ஆதலால் இன்னும் சில நிமிஷங்க ளேனும் இங்கு இரு' என்று மிக ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டான். அதன்மீது அவளும், 'அப்படியானால் சரி. இன்னும் இரண்டு நிமிஷங்களே இருப்பேன். சுருக்கமாக எல்லாவற்றையும் சொல்லிவிடு. என்னைச் சமாதானப்படுத் தவோ, உன் வழிக்குக் கொண்டுபோகவோ முயற்சி செய் யக்கூடாது' என்று கூறினாள்.

அதைக் கேட்ட நளினரஞ்சன் அதிக துக்கமடைந்து 'பெண்ணே! அவ்வாறு கூறாதே. நான் உன்னைத் தேடியே இவ்வளவு தூரம் அலைந்து வந்திருக்கிறேன். ஆதலால் நீ என்மீது இரக்கம் வைத்துப் பேசு. உன்னை நான் காதலிப் பதுபோல் இவ்வுலகில் வேறு எந்த ஆடவனும் எந்த மாதை யும் காதலிக்கமாட்டானென்பது நிச்சயம். உன்மீதுள்ள காதலில் நான் வெற்றியடைவேன் என்னும் நம்பிக்கையின் மீதே என் வாழ்க்கையை வைத்திருக்கிறேன். இதில் நான் ஏமாற்றமடைவதாயின் உயிரை விடுவதைத் தவிர வேறு வழி எனக்கில்லை. ஆதலால் யோசித்துப் பேசு' என்று பரிதாபமான குரலில் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். அதைக் கேட்ட அவள் அச்சங்கொண்டாள். அவள் தனக் காக அச்சங் கொள்ளவில்லை. அச்சமென்பதே அவளது அகராதியில் கிடையாது. மேலும் நளினரஞ்சன் இப்போது கொள்ளைக்கூட்டத் தலைவனாக இல்லாததால் அவன் தன்னைச் சிறையில் அடைத்துவிடுவானோ என்னும் பயமும் அவளுக்கு இல்லை. ஆனால் தன்னை மனமார நேசிப்பதாகச் சொல்லும்

அவன் தற்கொலை செய்துகொண்டு விடுவானே என்னும் அச்சம்தான் அவளை வாட்டியது. ஆகவே அவள் அன்புடன் தன் கையை நீட்டி அவனது கரத்தைப் பிடித்துக்கொண்டு, 'சிநேகிதனே! உன் விஷயத்தில் நான் அதிக இரக்கம் காட்டுகிறேன். உன்னிடம் சிநேகிதன் என்னும் முறையில் எனக்குச் சிறிதும் அன்பு குறையவில்லை. ஆயினும் ஒரு பெண்ணின் காதலைப் பெறவேண்டுமாயின் இப்படியெல்லாம் தற்கொலை செய்துகொள்வதாகவும், மற்ற விதமாகவும் அச்சுறுத்துவது சரியல்ல' என்றாள். அதற்கு அவன், 'இல்லவே இல்லை. அச்சுறுத்துவதால் காதலைத் திருப்பிப் பெற முடியாதென்பதை நான் அறியமாட்டேனா? நான் படும் அவஸ்தையெல்லாம் உன்னிடம் நான் கொண்டுள்ள காதலுக்காகவேயாகும். இதிலிருந்தே என் காதலை நீ அளந்துகொள்ளலாம். நான் என் விஷயத்தையெல்லாம் உன்னிடம் சொல்ல விரும்புகிறேன். இரண்டு நிமிஷம் பேசுவதாக வாக்களித்திருக்கிறாயே? நான் பேச ஆரம்பிக்கட்டுமா?'' என்று கேட்டான்.

அதற்கு அவள், 'நாம் இங்கே நின்றிருப்பதால் யாரேனும் பார்த்துவிடுவார்கள். நான் மிக்க எச்சரிக்கையுடன் இருக்கவேண்டியதாக இருக்கிறது. இதோ பக்கத்தில் ஒரு தோட்டமிருக்கிறது. அதில் மரங்களடர்ந்து இருட்டாக இருக்கும் இடத்துக்குச் செல்வோம்' என்றாள். அப்படியே அவர்கள் இருவரும் ஓரிடத்துக்குச் சென்றதும் நளினரஞ்சன் பின்வருமாறு கூறலானான்:—என்னை விட்டு நீ தப்பியோடிவிட்டாய் என்பது எனக்குத் தெரியவந்ததும் என் மனம் என்ன பாடுபட்டது தெரியுமா? அப்படியே மயக்கமாய் விட்டேன். உன்னைத் தேடிப் பிடித்துக் கொண்டுவர நான் முயற்சி செய்யவில்லை. நான் உன்னிடம் காண்பித்த அன்பு காரணமாகவும் உன்னை இனிமையாக நடத்தியதாலும் நீ

என்னிடம் நேசங்கொண்டிருப்பாய் என்று நினைத்தேன். ஆனால் நீ ஓடிவிட்டதிலிருந்து நான் உன்னிடம் காண்பித்த அன்பெல்லாம் வீணாயிற்று என்று உணர்ந்தேன். நான் மயக்கத்திலிருந்து தெளிந்ததும் அதிக கவலையுடன் இருந்தேன், என் சகாக்கள் நான் அப்போது முக்கியமாய் முடிக்கவேண்டியிருந்த ஒரு வேலையை ஞாபகப்படுத்தியதால் என் கவலையைச் சிறிது மறந்து அதைக் கவனித்தேன். ஒரு பெரிய ஜமீன்தார் வீட்டுப் பையனைக் களவாடி வைத்திருந்தோமல்லவா? அவனை மீட்டுக்கொள்வதற்காக அவனுடைய பெற்றோர்கள் பெருந்தொகையை அளித்தார்கள். பிறகு எனக்கு மனதில் வேறுவிதமான மாறுதல் ஏற்பட்டுவிட்டது உன்னைப் பின்தொடர்ந்து வந்தால் உன் மனதை மாற்றி உன்னை அடைய முயற்சிக்கலாமே என்னும் எண்ணம் தோன்றியது. அதன்படியே நான் அக்கொள்ளைத் தொழிலை விட்டு விட்டேன். அப்போது நாம் கொள்ளையடித்துச் சேர்த்து வைத்திருந்ததில் பெரும்பாகம் கிடைத்தது. நான் என் சகாக்களை விட்டுப் பிரியும்போது அவர்கள் என்ன கஷ்டப்பட்டார்கள் தெரியுமா? நான் அங்கிருந்து வந்துகொண்டிருந்தபோது தெய்வச் செயலாகத் திடீரென்று குதிரை மீதிருந்து விழுந்து நோய்வாய்ப்பட்டேன். ஏழை விவசாயிகள் என்னைக் கொண்டுபோய்க் காப்பாற்றினர். பல வாரங்கள்வரை அவர்களுடனேயே காலங்கழித்தேன். உடம்பு சுமாராகச் சௌஸ்தமாகி அவ்விடத்தை விட்டுப் புறப்பட வேண்டிய சமயத்தில் அங்கு ஷிகார் வந்த அப்பிரதேசத்தின் ஜமீன்தார் குமாரன், நான் அங்கிருப்பதைத் தெரிந்துகொண்டு என்னைப் பிடித்துச் சிறையில் வைக்கும்படி கட்டளையிட்டான். என்னை அழைத்துச் சென்று ஜமீன்தாரின் மந்திரியிடம் விட்டார்கள். தற்கால வசமாக அந்த மந்திரி

என்னுடைய பந்துவாக இருந்தார். அவர் என்னிடம் அனு தாபங் காட்டி அவர் வசிக்கும் நகரத்திலேயே ஒரு சிறையில் அவரது மேற்பார்வையிலேயே என்னை வைத்துக்கொண்டார். நான் ஆறுவருஷ சிறைத் தண்டனை அடைந்தேன். அந்தக் காலத்தில் நான் ஒரு ஆசிரியரை அமர்த்திக்கொணடு பல பாஷைகளையும் நூல்களையும் கற்றேன். இதற்குள் அதே ஊரில் எனக்கு நெருங்கிய பந்துவாகவும் பெரிய பணக்கார ராகவும், பிரபுப்பட்டம் பெற்றவராகவும் இருந்த ஒருவர் இறந்துவிட்டார். அவருக்குப் பிள்ளைகள் இல்லாமையால் வேறு வாரிஸ்தார் யார் என்று விசாரித்ததில் நான் தான் என்று தெரியவந்தது.

என்னுடைய மற்றொரு பந்துவான அச்சமஸ்தான மந் திரி என் விஷயத்தில் அதிக சிரத்தை காட்டி நான் சிறையி லிருந்து வெளிப்பட்டதும் அந்த சொத்து முழுதும் பட்டத் துடன் எனக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்தார். நான் நல்ல அந்த அந்தஸ்தை அடைந்ததும் சௌகார் நளினரஞ் சன் பாபு என்று பலராலும் அழைக்கப்பட்டேன். அரசாங் கத்தில் எனக்குப் பெரிய பதவியைக் கொடுப்பதாகவும் நான் சேனையில் சேர்ந்து உழைக்க வேண்டுமென்றும் சொன்னார் கள். ஆனால் அச்சமஸ்தானதிபதி மிகக் கொடியவனாகவும், ஜனங்களால் வெறுக்கப்பட்டவனாகவும் இருந்ததால் அவனி டம் ஊழியம் புரிய என் மனம் இசையவில்லை அங்கு பொது ஜனப் பொறுப்பாட்சி ஏற்படுவதற்காக ஜனங்களுடன் உழைக்க வேண்டுமென்று எண்ணினேன். ஏனென்றால் எந்த ஒருநாடும் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டுமாயின், தேசமக்கள் சமத்வத்தையும் சமாதானத் தையும் அடைந்து சௌகரியமாக வாழவேண்டுமாயின் அந் நாட்டுக்குச் சுயஆட்சி வேண்டும். தனியரசோ, சர்வாதிகா

ஆட்சியோ கூடாது. ஆதலால் நான் அவ்வாறு எண்ணினே னென்றாலும் உன்னைப் பறிகொடுத்த என் மனம் அமைதி யுடன் இருக்கவில்லை. அவ்வளவு ஆஸ்தி பாஸ்திகளும் பட்டமும், ஜனங்களிடையே எனக்கு இருந்த செல் வாக்கும் எனக்குத் திருப்தியை அளிக்கவில்லை. உன்னைக் கண்டு பேசி உன் காதல்பெற்றுக் கொண்டால்தான் என் வாழ்க்கையில் இன்பமுண்டு என்பதை உணர்ந்தேன். ஆக வே என் சொத்து சுதந்தரங்களை யெல்லாம் ஒருவரிடம் ஒப் படைத்துவிட்டு இந்த தேசத்துக்குப் புறப்பட்டேன். நான் நாகபுரி துறைமுகத்தை யடைந்ததும் என் மனம் அதிக கவலைப்பட்டது. நீ எங்கே இருக்கிறாயோ உன்னை எப்படித் தேடுவது,! அகப்படாவிட்டால் என்ன செய்வது? என் றெல்லாம் பலவிதமான யோசனைகள் என் மனதில் உதய மாயின. ஆயினும் எப்படியாவது உன்னைக் கண்டுபிடித்து என் உண்மையான காதலின் தன்மையை உன்னிடம் தெரிவித்துக் கொண்டு உன் காதலையும் பெற்றே திரும்பிச் செல்வதென்னும் உறுதி கொண்டேன். நாகபுரியில் ஒரு ஓட்டலில் தங்கிய போது, என் சாமான்களின் மீது ஒட் டப்பட்டிருந்த என் பெயர் அடங்கிய அட்டைத் துண் டைக் கண்டமாத்திரத்தில் அந்த ஓட்டல் சொந்தக் கார ரின் மூத்த குமாரியாகிய கமலவதி என்பவள் என் விஷ யத்தில் அதிக சிரத்தையுடன் நடந்து கொண்டதுடன் என்னுடன் பேசவும் ஆரம்பித்தாள். நான் இங்குவந்த கார ணம் என்ன என்றும் என் விஷயத்தில் அவள் அக்கறை கொண்டிருப்பதாகவும் கூறினாள். அதன் மீது அவளிடம் நான் எதையும் மறைத்து வைக்கக் கூடாதென நினைத்து எல்லா விஷயங்களையும் உள்ளபடியே சொன்னதுடன் உன் னைத்தேடிக் கொண்டே இவ்விடம் வந்திருப்பதாகவும் தெரி

வித்தேன். அவள் மிக்க சந்தோஷமடைந்து உன் வீட்டைத் தெரிவித்து அங்கு போய்ப் பார்த்தால் உன் வேலைக்காரி இப்போது நீ இருக்கும் இடத்தைத் தெரிவிப்பாள் என்று சொன்னாள். அதன் மீது முதலில் நீ இருந்த இடத்துக்குப் போனேன். அங்கு நீ இல்லாமையால் உன் வேலைக்காரியால் உன் இருப்பிடத்தைத் தெரிந்து கொண்டு இங்கு வந்தேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் உன்னைத் தனியே வெளியிலேயே பார்த்ததற்காக மிகவும் சந்தோஷமடைகிறேன். என் கதை முடிந்து விட்டது. என் எதிர்கால வாழ்வு உன்னிடமே உளது. நீ தயவு செய்து என்னிடம் கிருபை காண்பித்து எனக்குத் திருப்தியைத் தரக்கூடிய பதிலைக் கொடு. நான் இருப்பதா? அல்லது இறப்பதா என்பது உன் பதிலைப் பொறுத்திருக்கிறது. நான் என் ஆஸ்தி பாஸ்திகளையும் பட்டத்தையும் உன் பாதத்தடியில் சமர்ப்பிக்கின்றேன். உன் உருவமே என் கண்முன் எப்போதும் இருப்பதால் வேறு யாரையும் நேசித்தும் அறியாத பரிசுத்தமான காதல் நிரம்பிய என் மனத்தை உனக்கே அர்ப்பணம் செய்கிறேன்.

இதை யெல்லாம் அனுதாபத்துடன் கேட்டுக் கொண்டிருந்த நவநீதம் 'பிரபுவே! என்னிடம் நீ அதிக காதல் கொண்டிருக்கிறாய் என்பது உன் பேச்சாலும் செயல்களாலும் நன்கு தெரிகிறது: அதை நான் ஒப்புக்கொள்ளவில்லையென்றால் நான் துரோகம் செய்தவளாவேன். என்னிடம் நீ இவ்வளவு காதல் கொண்டிருப்பதற்காக நான் உனக்கு நன்றி செலுத்துகிறேன். அதுமட்டுமா? நான் மனமார பழையபடி உன்னிடம் சினேகத்துடன் இருப்பேன் என்பதும் சத்தியம். ஆனால் இப்போதும் எனக்கு உன்னிடம் காதல் என்பது ஏற்படவில்லையே நான் என்ன செய்வேன்'

என்றாள் அதற்கு அவன்' என்னிடம் இவ்வளவு அனுதாபமும் அன்பும் கொண்டுள்ள உனக்குக் காதல் ஏற்படவில்லையென்றால் அதற்குக் காரணம் என்ன, ஒருகால் நான் இடையில் சொற்பகாலம் கொள்ளைத் தொழிலில் ஈடுபட்டிருந்தேன் என்பதற்காக என்னை மணந்துகொள்ள நீ அருவருப்பு அடைகிறாய் போலும் என்று கவலையுடன் கூறியபோது நவநீதத்தின் மனமுருகியது. தானும் கொள்ளைத் தொழிலில் சொற்பகாலம் ஈடுபட்டிருந்தாளல்லவா? ஆதலால் அதைக் கொண்டே அவனை அருவருக்க முடியாது. அவன் அவளுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறான் என்பதையும் அவள் அறிந்துகொண்டாள். ஆகவே அவள் அவனைப் பார்த்து, 'அன்பா! அப்படி நினைக்க வேண்டாம். நான் உன்னிடம் எக்காரணத்தைக் கொண்டும் அருவருப்புக் கொள்ளவில்லை. அத்தாட்சியாக இதோ இந்தக் கரத்தை நண்பன் என்னும் முறையில் பிடித்துக்கொள். நான் அருவருப்பு அடையவில்லை என்பதற்கு இதுவே அத்தாட்சியாகும். நான் சினேகிதை என்னும் முறையில் உனக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன். ஆனால் காதலி என்று என்னை நீ கொள்ளலாகாது. என் மனத்தில் காதல் தோன்றவில்லையே' என்றாள். அப்போது அவள் ஒன்றும் தோன்றாமல் திக்பிரமையுடன் நின்றாள். நளினரஞ்சன் அவளது அழகிய கரத்தைப் பிடித்து அதன்மீது அளவற்ற முத்தங்களைக் கொடுத்தான். அவள், அவன் முத்தமிடுகிறான் என்பதைத் திடீரென்று உணர்ந்தவள்போல் தன்கையை இழுத்துக்கொண்டு 'நண்பா! நமது சம்பாஷணை நீடித்துவிட்டது. இனி ஒரு நிமிஷமும் இங்கே இருக்கலாகாது. நாம் மறுபடியும் ஒருமுறை சந்திப்போம். உனது விலாசத்தைக் கொடுத்துவிட்டுப் போ. நான் நிதானமாக எல்லாவற்றையும் யோசித்து உனக்குக் கடிதம் எழுதுகிறேன்' என்றாள். அதற்கு அவன், அவளது கையைப்

பிடித்து அதன்மீது முத்தமிட்டுக்கொண்டே, 'கண்மணி! உன் இஷ்டப்படியே இப்போது நடந்துகொள்கிறேன். ஆனால் ஒவ்வொரு நிமிஷத்தையும் ஒவ்வொரு யுகமாக நான் கழிப்பேனுதலால் காலப்போக்கு செய்யாமல் உடனே எனக்கு எழுது' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டு அவன் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுத் தான் தங்கியிருந்த ஒட்டலுக்குச் சென்றான். நவநீதமும் அவனை விட்டுப் பிரிந்து செல்வநாதர் என்னும் மனோகரம் பிரபுவாகிய தன் தந்தையின் வீட்டுக்குச் சென்றாள்.

ஐயோ பாவம்! காதல் என்பதே இன்னதென்று தனக்குத் தோன்றவில்லையென்று தன் சகோதரனிடம் சொல்லிக் கொண்ட நவநீதத்துக்கு அன்று நளினரஞ்சன் தரிசனத்தாலும், அவளிடம் கொண்ட காதல்காரணமாக அவன் அலைந்து திரிவதைக் கேட்டதாலும் மனோ நிலை ஒருவாறு மாறியது. அவனுடைய உருவமும், அவன் சொன்ன சங்கதிகளும், அவன் அவளது கையில் கொடுத்த முத்தங்களும் அவளது மனக்கண்ணை விட்டு மறையவேயில்லை. அவளுக்கு அடிக்கடி அந்த எண்ணமே தோன்றி வந்தது. மறுநாள் காலை சுமார் ஏழு மணிக்குத் தன் அறையில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தபோது முன்நாள்மாலை நடந்த சம்பவம் அவளது ஞாபகத்துக்கு வந்துவிட்டது. அப்படியே அவள் மெய்மறந்தாள், பலவிதமான சிந்தனையில் மூழ்கலானாள். நளினரஞ்சனைச் சில வருஷங்களுக்கு முன் அவள் பார்த்தபோதும் அவளும் அவனும் இருந்த நிலைமையையும் நேற்று பார்த்த போது அவர்கள் இருவரும் இந்த நிலைமையையும் யோசித்தாள். முதலில் அவனிடம் அவளுக்குக் காதல் உண்டாகவில்லையென்றால் அவளும் திக்கற்றவளாயும் கைதியாயும் இருந்தாள். அவனும் அவளைச் சிறைவைத்தவனுயும் கொள்

ளைக் கூட்டத் தலைவனுயுமிருந்தான். அப்படிப்பட்ட நிலைமையில் அவனிடம் அவளுக்குக் காதல் தோன்றுமா? ஆனால் மூன் நாள் மாலை அவனைச் சந்தித்தபோது அவளும் ஒரு பெரிய பிரபுவின் குமாரியாகவும் தக்க அழகும் யௌவனமும் சுதந்தரமும் வாய்ந்த பெண்மணியாக இருந்தாள். அவனும் பெரிய பிரபுவாகவும், யௌவன புருஷனுகவும் இருந்தான். ஆகவே அவனைக் கண்டமாத்திரத்தில் அதுவும் பரஸ்பரம் இருவரும் தங்கள் நிலைமையையும் அந்தஸ்தையும் அறிந்ததும் ஒத்த குணமும் அறிவும் அந்தஸ்துமுள்ள அவனிடம் அவளுக்கு இயற்கையாகவே காதல் ஜனித்தது. ஆனல் அவன் எதிரில் இருக்கும்போது அவளுக்கு அது தோன்றவில்லை. அவன் அவளை விட்டுப் பிரிந்ததும் காதல் நெருப்பினல் அவள் தகிக்கப்படலானள். நீண்ட நேர யோசனைக்குப் பின்னர் தான் இவ்வுலகில் அந்த நளினாஞ்சன் பாபுவுக்கு இன்பத்தை அளிக்கவே பிறப்பிக்கப்பட்டிருப்பதாக உணர்ந்தாள். ஆனல் ஒரு எண்ணம் அவளை அதிகம் வாட்டியது. அதாவது அவள் துளசிங்கம் பிரபுவுக்குக் கொடுத்து விவாகம் செய்விக்கப்பட்டிருக்கிருள் அல்லவா? தான் அதை ரத்துசெய்துவிட்டாலும் அவள் இன்னும் கன்னிகையே என்னும் எண்ணம் பொது ஜனங்களுக்கு எப்படி உண்டாகப் போகிறது என்று யோசித்தாள். ஆனல் திடீரென்று ஒரு எண்ணம் ஞாபகத்துக்கு வந்தது. அதாவது தன் தந்தையே அவளை இந்திராபாய் என்னும் பெயரால் அழைப்பதை விட்டு விட்டுக் குழந்தைப் பருவத்தில் வைக்கப்பட்ட நவநீதம் என்னும் பெயராலல்லவோ அழைக்க ஆரம்பித்திருக்கிருர். ஆதலால் அவர் அவளைக் கன்னிகையாகவே ஏற்றிருக்கிருரென்றும், அவள் யாரை நேசிக்கிருளோ அவனுடன் அவள் விவாகம் செய்விக்கப் படலாம் என்றும் அவள் நம்பினள்.

ஆகவே அவள் அந்த நம்பிக்கையால் மூன் நாள் நளின

ரஞ்சனிடம் அவள் உறுதியான வாக்களித்தபடியே அவ னுக்குக் கடிதம் எழுதுவதென்று நிச்சயித்துவிட்டாள். ஆயி னும் அவசரப்படாமல் இரண்டொருநாள் பொறுத்துப் பார்த்துத் தன் மனம் எப்படிப்பட்ட அனுபவங்களை யடை கிறது பார்க்கலாமென நினைத்தாள். எனினும் பொறுக்க முடி யவில்லை. உடனே கடிதம் எழுதி அவனை வரவழைத்து மறை வான இடதநில் சந்தித்துப் பேச வேண்டுமென்னும் ஆவல் அதிகரித்துவிட்டது. அப்படியும் மூன்றுநாள் சமாளித்துவிட் டாள். நான்காவது நாள் அவனுக்குக் கடிதம் எழுதாமலி ருக்க அவளால் முடியவேயில்லை. இந்தமூன்று நாட்களிலே யே அவள் முகம் வாடிவிட்டது. புத்தி தடுமாறியது. ஆகவே நான்காவது நாள் அவள் நளின ரஞ்சனுக்குக் கடிதம் எழுதி அன்றுமாலை ஏழுமணிக்கு முன்பு சந்தித்த அதே தோட்டத் துக்கு வரும்படி தெரிவித்தாள். அன்று பகல்முழுதும் அவள் தன் மனக்குழப்பத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளாம லும் மாலை தனக்கு வேறுவேலை எதுவும் நேராதபடியும் தான் தனியே செல்ல சமயம் வாய்க்கும்படி செய்வதிலும் காலத் தைக் கழித்தாள், மாலையும் வந்தது சுமார் ஏழுமணிக்கு அவள் தனியாக அம்மாளிகையின் பின்னால் சுமார் அரைமைல் தூரத்திலுள்ள தோட்டத்துக்குச் சென்றாள். நளினரஞ்சன் வருவானோ இல்லையோ என்னும் ஏக்கம் அவளுக்கு அதிக மாய்விட்டது. திடீரென்று அவனும் மிகவேகமாக நடந்து வருவதைக் கண்டு சந்தோஷ மடைந்தாள் அவன் அவளை அணுகியதும் தன் காதல் மிகுதியால் மெய்மறந்து அவளை இறுகத் தழுவிக்கொண்டு அவளது கன்னத்திலும் உச்சியி லும் பல முத்தங்களைத் தந்தான். ஆ! காதலின் வலிமையை என்னென்று சொல்வது? சாதாரண காலத்தில் அவ்வாறு அவன் அணைத்துக் கொண்டு முத்தமிட்டிருந்தால் உடனே அவள் விலக்கிக் கொள்வதுடன் அவனைக் கண்டித்துமிருப்

பாள். ஆனல் அப்போது அவளும் காதல் என்னும் சமுத்திரத்தில் மூழ்கி விட்டிருந்தபடியால் அப்படியே மெய்மறந்து நின்ருள். பிறகு அவள் 'ஆம், நான் உன்னைக் காதலிக்கிறேன்! என்று கண்ணீர் விட்டுக்கொண்டே சொன்னுள் அளவுகடந்த சந்தோஷத்தால் நளினரஞ்சன பாபுவும் பேசவில்லை. சொற்ப நேரத்துக்குப் பிறகு அவன் வாய்திறந்து, 'ஆ! நான் இப்போது காண்பது கனவோ நினவோ. தெரியவில்லை. என்னுடைய முயற்சி வீணுகவில்லை. இனி என் வாழ்க்கை இவ்வுலகத்துக்குப் பயன்படும். உன்னை மனைவியாகக்கொண்டு நான் இவ்வுலக இன்பத்தை எல்லையற்ற வகையில் அனுபவிப்பேன் என்று கூறினுள்.

அப்போது அவள் 'காதல்! நாம் நிற்பதில் பிரயோசனமில்லை. அதோ அங்கு உட்கார்ந்து சில நிமிஷங்கள் பேசவேண்டும். நான் என் சம்பந்தமான சில உண்மைகளை உன்னிடம் தெரிவித்து விடவேண்டும்! என்ருள்' அப்படியே இருவரும் உட்கார்ந்ததும் தான் துளசிங்கம் பிரபுவுக்கு விவாகம் :செய்விக்கப்பட்டுப் பிறகு ரத்தாய்விட்டதும், தானும் அவனைப்போலவே இடையில் சொற்பகாலம் கொள்ளைத் தொழிலில் ஈடுபட நேர்ந்ததையும் விவரித்துக்கூறி அதற்காகவெல்லாம் அவன் அவளிடம் அருவருப்புக் கொள்ளலாகாதென்று கேட்டுக் கொண்டான். அதற்கு அவன் இந்தச் சங்கதிகளை யெல்லாம் முன்பே கமலவதியின் மூலம் அறிந்து கொண்டிருப்பதாகவும், பெண் என்னும் முறையில் அவள் பரிசுத்தமானவள் என்பது தனக்குத் தெரியுமென்றும் சமய சந்தர்ப்பங்களை யொட்டித் தன்னைப்போலவே கொள்ளைத் தொழிலில் ஈடுபட்டதைத் தான் பொருட்படுத்தப்போவதில்லையென்றும் தான் அவளை மனமாரக் காதலிப்பதால் அவள் உடனே தன்னை விவாகம் செய்துகொண்டு தன்வாழ்க்கையில்

இன்பத்தை அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். பிறகு அவள் அப்படியே செய்வதாகச் சம்மதித்தாளென்றும் தான் இப்போது செல்வநாதர் என்னும் மனோகரம் பிரபுவின் ஆதரவில் இருப்பதையும், அவருக்குத் தெரியாமல் இந்தக் காதல்விஷயமாகவும் அதிகப்படியாக ஒன்றும் நடந்துகொள்ள முடியாதென்றும், செல்வநாதர் விரைவில் திரும்பி வருவாராதலால் அவரிடம் உண்மையான நிலைமையை எடுத்துக் கூறி அவனையே மாளிகைக்கு வரவழைப்பதாகவும் அதற்கிடையில் மீண்டும் இருவரும் சந்திப்பது சரியல்லவென்றும் கூறினாள். அதற்கு அவன், 'நீ அப்படியே செய்வதில் எனக்கொன்றும் ஆட்சேபமில்லை. ஆயினும் என் மனத்தில் ஒரு விதமான நம்பிக்கையையும் இன்பத்தையும் தோன்றச்செய்து விட்டு வீண் காலதாமதம் செய்யவேண்டாம். எவ்வளவு சீக்கிரத்தில் நமது காரியத்தை முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் முடி' என்று சொல்லிக்கொண்டே அவளை இறுகத் தழுவிக்கொண்டு பல முத்தங்கள் தந்த பின்னர் அவளைவிட்டு நீங்கினான். அவளும் அவன் தந்த முத்தங்களை மறவாத நிலைமையில் விட்டுக்குச் சென்றாள்.

அன்பர்களே! காதலின் மகிமையைப் பார்த்தீர்களா? காதல் என்றால் இவ்வாறு சோதனைக்குப் பின்னர் உதிக்க வேண்டும். இத்துடன் நமது இரத்தினபுரி இரகசியத்தின் எட்டாம் பாகம் அதாவது மூன்றாவது கதையின் இரண்டாம் பாகம் இந்த எண்பதாவது அத்தியாயத்துடன் முடிகிறது. ஒன்பதாவது பாகத்தில் இக்கதையின் மிகுதி பாகத்தையும் தெரிவிப்போம். அன்பர்கள் கடைசிவரை ஆவலுடன் படித்து இக்கதையின் இன்பத்தை நுகர்வீர்களென்று நம்புகிறோம்.

ஓம் தத் ஸத்:

எட்டாம் பாகம் முற்றிற்று.

186581

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்தபோதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ளு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி ரகசியம் 3-ம்,4-ம்.5-ம்,6-ம்,7-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 8-ம்பாகம் என்றநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரமபம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப் பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.			
இரத்தினபுரி இரகசியம் 7-பாகமும் ...	13	14	தினகரசுந்தரி ரூபா	1	0
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	ரத்னாபாய் ...	1	18
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	10
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2பாகம் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	2
இராஜாமணி ...	2	0	கமலசேகரன் ...	1	12
ஆனந்தஸிங் ...	2	0	பூங்கோதை ...	0	12
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஞானசெல்வாம்பாள்			அமராவதி 2 பாகமும்	4	0
5 பாகமும் ...	9	10	மதனாம்பாள் 2 பாகமும்	3	0
			லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.